LC
N56
109846

உ

பரமபதிதுணை.

நந்தீஸ்வரர் அருளிச்செய்த

# நிகண்டு 300.

கருக்கடை நிகண்டு 300க்கு சூஸ்திரம் 30ம்

சேர்ந்தது.

மதுரை, வித்வான்

த. சுப்புசாமி நாயுடு அவர்களால்

பார்வையிட்டபடி

மதுரை புதுமண்டபம் புத்தகசாலை,

ஜி. இராமசாமிக்கோன்

இ. ராமு. குருசாமிக்கோனார் ஸன்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசி வீதி, குருசாமிக்கோனார் தெரு

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது. காப்பி ரைட்.

ARCHIVES LIBRARY
109846

இரண்டாவது பதிப்பு

500—காப்பிகள். 1952.

LC
N56

உ

பரமபதி துணை.

# நந்தீஸ்வரர்

# நிகண்டு 300.

## காப்பு.

வெள்ளியங் கிரியான் தந்த வேழமா முகனே யெந்தன்
உள்ளினுக் குள்ளாய் நாளும் உருவினுக் குருவாய் நின்று
வள்ளலாய் நீயும் வந்தே வாக்கது கொடுத்து மேலும்
பிள்ளைபோற் பாது காக்கப் பிரியமாய்ப் போற்று வேனே. (1)

போற்றியென் றடிவ ணங்கும் புசுண்டமா முனிவர் பாதம்
ஏற்றியே வணங்கி நந்தி இயல்புடன் நிகண்டு சொல்லக்
கூற்றினை யுதைத்த யீசன் குமரிமா மலைம டந்தை
சாற்றிய படியே யானும் தரணியோர்க் குரைத்திட் டேனே. (2)

உரைத்ததோர் வேத நான்கும் உயர்பதி னெண்பு ராணம்
நிரைத்ததோர் காந்த மொன்றும் நிலையுறும் யோக மொன்றும்
கரையிலா நந்தி வாக்கியம் கணக்குமத் தாள மொன்றும்
தரையில்மூந் நூற்றுக் குள்ளே சாற்றினே னறிந்து பாரே. (3)

பாரப்பா வேத வாக்யம் பண்புட னுரைத்தே னித்தை
தேரப்பா முற்றும் பார்த்துத் தெளிந்தொரு நிலையில் நிற்பாய்
ஆரப்பா யெனைப்போற் சொல்வார் அரனெனக் குரைத்த நூலை
காரப்பா உந்த னுக்காய்க் கருத்துடன் வெளியிட் டேனே. (4)

இட்டேனே யிந்நூலுஞ் சிறந்தவாக்காய்
இவைபுமைய முரைத்தமொழி தவிர்த்திடாமல்
விட்டேனே சண்டீசன் மனமுந்தேற
விளம்பினேன் வடமொழியின் விரிவைக்கண்டு
தொட்டேனே இந்நூலைச் சுருக்கமாகத்
தொல்லுலகோர்க் குண்மையிது தெரியவேண்டி
நட்டேனே தமிழ்ப்பயிராய் விளையவைத்து
நன்மைபெற யிப்பொருளைக் கூறினேனே. (5)

கூறியதோர் மாயசத்தி உரைத்தநூலைக்
கோடிமுடியோன் கண்டறியாக் குறியீதப்பா
வாறியென்ற சமுத்திரத்தின் கரைகண்டாலும்
மாயசத்தி யுரைத்தசொல்லோ கரைதோணாது
சீரியதோ ரிந்நூலை வெளிவிட்டாக்கால்
சிவனுமையாள் சாபமேத்தத்தெரிந்துகொள்வாய்
பாரிலிதை வீணருக்கு விள்ளவேண்டாம்
பாழ்நரகே யெய்துமிது பார்ப்பாய்நன்றே. (6)

நன்றென்ற நாமமது தொண்ணூற்றுறு
நடுவரையுங் கடைவரையு மெண்ணூறுகும்
கன்றென்ற நாமமது யெண்பதாகும்
கடைமுத்தம் நடுநீற்க அறுநூறுகும்
வன்றென்ற நாமமது அருபதாகும்
வலக்கடையுங் தலைநீக்கி நடுநூறுகும்
சன்றென்ற நாமமது யேதுமில்லை
சதமாறுஞ் சேர்த்தடித்தால் தான்தானமே. (7)

தானகு மூலமென்ற ஓங்காரத்துள்
சத்திநின்ற ஆங்கார பீடமேது
ஊனமே லிங்கத்தின் வழியாஞ்சத்தி
ஒடுக்கிலிங்கங் காணட்டால் சத்தியெங்கே
மானமென் மகாரமந்தப் பீடமேறில்
மாயசத்தி லிங்கத்துக் கோடுக்கமாகும்
ஆனமே அகாரமப்போ சத்திலிங்கம்
ஆச்சுதே அருவுருசண் டீசாநீயே. (8)

நீயென்ற உகாரமது ஐம்பத்தோன்று
நிறையான சிகாரமது அறுபத்தைந்து
தீயென்ற வகாரமது நூற்றேட்டாகும்
திகழ்ந்ததோரு மகாரமது யிருபத் தைந்தாம்
நீயென்ற அகாரமது யெழுபத்தைந்தும்
நிகழ்ந்ததோரு நகாரமது நூற்றேன்றுகும்
ஈயென்ற போருள் மூந்நூற் றறுபதாகும்
இசைகூட்டும் பன்னீரா யிரமுங் கூட்டே. (9)

கூட்டியே ரேசகத்தின் போக்குக்கைந்தாம்
குணமான பூரகத்துக் கைந்துயெட்டாம்
பூட்டியே பூரணத்துக் கோன்றுபத்தாம்
புகழான கும்பகத்துக் கொருநூறுகும்
ஆட்டிமூல சுவாதிக்கு முப்பதாகும்
அக்குமணி சதாசிவத்துக் கோரைந்தாகும்
சாட்டியே சவங்கிரண (ஓங்கார) சத்திக்கேன்ன
சதநிதமாம் ஆங்காரக் கணக்கோன்றீயே. (10)

கணக்கான பிரணவத்தின் வாக்குக்கோடி
கண்டுரைப்பேன் ஐயிரண்டும் ஒருநான்காகும்
விணக்கான வியாக்கிரண மேட்டுபத்தாம்
வித்வேதன முறையிட்டு உயிரேஜந்தாம்
இணக்கான தோய்தம்நா ளிகைக்கீரைந்து
யெண்ணியதோ ரோரேட்டு மிசைபோல்லாது
துணக்கான தோய்தத்தைத் தோணக்கண்டால்
தோலேங்தேறும் ஆறேன்ற சூஷங்காணே. (11)

காணவே போருளாகுங் குருவின்வாக்கு
கடந்தாக்கால் தத்துவங்கள் தோண்ணூற்றுறும்
கூணவே குடியோட்டுஞ் சங்கற்பசாலம்
குறையரையால் விள்ளுவதோர் நெறிகாணுதார்
பூணுவது போருமைவிட்டு அகணியாந்தல்
புரமுனக்குக் காணுது போருளைச் சார்வாய்
தோணுவது ஐம்புலனைத் தள்ளுதற்குத்
துள்ளிக்காய் கிள்ளியதைத் துலேத்துக்காரே. (12)

கார்ப்பதுவு முப்பத்தி ரேண்டிலோன்று
காரமது நீக்குவது நாற்பத்தேழு
பார்ப்பதுவு மீராது ஒவ்வோன்றுமேலே
பதிவான் தூலத்தின் வாறுகாணும்
சேர்ப்பதுவு மைந்தோடே நான்குமாகும்
சேர்த்திட்டாலேட் டேட்டுஞ் சிக்காதேன்றே
பூப்பதுவுங் காய்ப்பதுவும் நூலாங்கண்டாய்
பூதலத்திற் பிறப்பிறப்பு மில்லார் தானே. (13)

தானென்ற குருநாதன் சத்தியாலே
தானறிந்தார் மூலகுரு சூக்ஷங்காண
ஏனென்ற சதாசிவத்தாற் சத்திதானும்
இருந்தறிந்தாள் பூட்டினுட கருக்களெல்லாம்
ஊனென்ற பலயிர்க்குஞ் சிவத்தின்கூரு
ஓங்கார பிரணவமே சத்திகூரு
மானென்ற பரப்பிர்ம மாயிரூபம்
மயக்குமப்பா மனக்கண்ணல் வாழுஞ்சித்தே. (14)

சித்தென்றல் சித்தரிவ ரரிதுகண்டாய்
சிவமென்ற நாமமது மரிதுகண்டாய்
பித்தென்றற் பிரணவமு மரிதுகண்டாய்
பின்னு முன்னும் நீக்குவது மரிதுகண்டாய்
வித்தென்றல் விளைவதுவு மரிதுகண்டாய்
விளைந்தேறித் தேறுவது மரிதுகண்டாய்
நித்தென்ற நிசாகவச மரிதுகண்டாய்
நிராமயமாம் நிர்மலமு மரிதுதானே. (15)

அரிதான உருவமடா சத்திகாயம்
அதற்கடக்கம் புவியாகு மறிந்துகாணு
எரிதான தழலோடும் கூர்மைகண்டால்
எவ்வாறு மிச்சடலம் எண்பதாகும்
கரிபூக்குந் தழல்போலக் காணுமந்தக்
கனவிலே கண்டசிறு பொருளுமாகும்
நரிபதியாம் சத்தியிட்ட ஓசையப்பா
நாதாந்த மனோன்மணியால் நல்கலாமே. (16)

நல்குவரே புழுக்குடம்பின் சட்டமானல்
நாடாது கனவேகம் நாமப்பாரு
வேலதுவரோ விழியாட்டம் நிமைக்காகாது
வேதனையுள் ளடக்கிட அபானமூட்டும்
செல்குவரோ வேகமென்ற சிறுபெண்ணுத் தாள்
சிதறிநிற்கில் திரிந்திடுவாள் திரையைத் தானே
மல்குமென்ற பொருளுனக்கு வாய்க்குமானல்
மைந்தனே சண்டீசா மகாரந்தேறே. (17)

தேறுவது யேதுவென்று லெண்ணலாமோ
    தென்றலர்ந்த கொன்றையனைத் திறமாய்க்காட்டும்
ஏறுவது பூரணமே யேறினாலும்
    இகபர மேயிகபரமாம் யேறிப்பார்த்தால்
சேறுவது குண்டலியின் பூசைகொண்டு
    செறியான வழியோட்டே சிவத்தைநீக்கி
கூறுவது கருக்கடையின் போக்கைப்பாரு
    குருகவரும் பொருளறிவாய் சித்தியாமே. (18)

சித்திமுத்தி பத்தியென்ற பொருளைக்காணு
    சீரான சாதகமா மிருப்பைப் பூணு
நத்திநத்தி ஒத்திவருங் குறியைக்காணு
    நடனமிடு மதின்கூரை நாடிப்பாரு
சத்திமத்தி வெற்றியென்ற வீரம்பாரு
    சகனமிகு அதினுமிட்க் காட்டைக் கட்டு
பெத்திமெத்தி வித்தியென்ற மூலம்பாரு
    பிரணவத்தின் வாறுகண்டு பிரித்துப்பூணே. (19)

பூணுகின்ற ஓங்காரம் ஸ்ரீங்காரமெங்கே
    புகைந்தெழும்பும் மேகத்தின் பொருளையாய்ந்து
தாணுகின்ற வக்கல்கக்கச் சக்கமிக்க
    சரியான மூன்மூன்றி லடக்கம்பாரு
தோணுகின்ற வாசனையின் ரசகெந்த மைந்தும்
    தோட்ரான நவத்திலதுக் கொன்றும்பாரு
மாணுகின்ற பொருளறிய வழியீதென்று
    மாறியதி லிருப்பமேன மூன்றிற்பாரே. (20)

மூன்றான மூன்றமது சகலத்திற்கும்
    முதற்பீட்ம் வரையாரும் மூன்றின்கூறு
ஊன்றான உந்திக்கு ஓங்கார மாச்சு
    உழலுகின்ற பாதவரை றீங்காரமாச்சு
கான்றான கபாலமட்டு ஸ்ரீங்காரமாச்சு
    ககனமென வூடுருவிக் கருவாங்கோடி
தோன்றான காரமிட்டு (பனிரெண்டாயிரத்தி) லேர்துமாற
    தோமந்தக் குறிகாணங் துலங்குந்தானே. (21)

தானென்ற வம்முக்கோ ராயிரமுந்தள்ளு
தளராத நம்முக்கோ ராயிர முந்தள்ளு
சானென்ற சம்முக்கோ ராயிரமுந்தள்ளு
சதிரான உம்முக்கோ ராயிர முந்தள்ளு
வேனென்ற யிம்முக்கோ ராயிர முந்தள்ளு
வேதையென்ற அம்முக்கோ ராயிரமுந்தள்ளு
பானென்ற பம்முக்கோ ராயிரமுந்தள்ளு
பகருகின்ற லம்முக்கோ ராயிர முந்தள்ளே. (22)

தள்ளப்பா ஆயிரத்திற் பாதிகும்பந்
தயவான ரேசகத்துக் கப்படியேயாகும்
பள்ளப்பா பூரகத்துக் காயிரத்திற்பாதி
பண்டை மணிரேசகத்துக் கப்படியேயாகும்
விள்ளப்பா வியாக்கிரனுக் காயிரத்திற்பாதி
வீருன துரியனுக்கு மப்படியேயாகும்
உள்ளப்பா ஒன்றுக்கு மூன்றேயாகும்
உயர்சிகரிற் கண்டசிறு தீபமாமே. (23)

தீபமென்ற ஒன்றுக்கு ஒன்றும்பாரு
சிரணவமாம் பிரணவத்துக் காருஞ்சோதி
தீபமென்ற பஞ்சரத்துக் கஞ்சாந்தீபம்
தீபமென்ற நஞ்சனுக்கு நாலாந்தீபம்
தீபமென்ற குமரிக்கு மூன்றுஞ் சோதி
திகண்டகட லாடிக்கி யிரண்டாந்தீபம்
தீபமென்ற ருத்திரும் ருத்திர ரூபி
திருவுருவு மொன்றுக்கோ ரொன்றே சோதி. (24)

சோதிகண்ட யிடமதுவே வெளியதாகும்
சொரூபம் நின்ற யிடமதுவே சத்தியாகும்
ஆதிநின்ற யிடமதுவே மூலமாகும்
அயன்நின்ற யிடமதுவே கமலமாகும்
பாதிநின்ற யிடமதுவே கண்டமாகும்
பருதிநின்ற யிடமதுவே விழியதாகும்
கேதுநின்ற யிடமதுவே செவியதாகும்
கிளர்த்துகின்ற பந்தனமே வாயதாமே. (25)

தாமென்ற வாயிக்கோர் நிலைதானுண்டோ
சத்திமத்தி புத்திபத்தி யெத்தி யந்தம்
வாமென்று பொழிவதுவே அதுவுமாச்சு
வாமாய சிவாயவென் றதுவுமாச்சு
காமென்ற சுடர்மூன்று மதுவேயாச்சு
கயநயவய மென்றமூன் றதுவேயாச்சு
பாமென்ற பரம்பொருளிவ் வாறு வந்தால்
பரம்பொருளா மதுவெனவாய்ப் பகரலாமே.(26)

பகர்ந்திடவே யொண்ணாது பொல்லாப் பூட்டு
பாசபந்த மெத்தவுண்டு பகரக்கேளு
தகர்ந்திடவே பூரணத்தி லுதையும் போது
தங்காது காமத்தின் கடற்பூட்டொன்று
உகர்ந்திடவே வேகமது அடங்காதந்த
உற்றசிந்தை கொண்டாடும் உகாரம்பூட்டு
சிகர்ந்திடவே வெளியாக்கும் பொய் மாயப்பூட்டு
சிக்காது வாய்க்கடங்காத் தீரப்பூட்டே. (27)

தீரமென்ற மகோதரனும் ஊமையப்பா
திரம்விள்ள வகைகாணன் சிக்கிக் கூண்டில்
மீரமென்ற நால்வருக்கு மூழிக்காரன்
மிதமவர்க்குத் தென்பட்டு மிக மியம்மூழ்கி
பீரமென்ற மவ்வெழுத்து நவ்வெழுத்திற் சிக்கி
பிரளாமற் பிறக்குமது மீனசூக்ஷம்
கீரமென்ற கிரணவகை யெதுதானாகும்
கிளம்புகின்ற கிரணமொழி பூசைகேளே. (28)

கேளப்பா சண்டீசா வுண்மையாகக்
கிளத்துகிறேன் கிரணவழி கொண்டுதேற
மீளப்பா வவ்வெழுத்து ரவ்வெழுத்துங் கண்டு
மீனமுச்சஞ் சுவாதியிடம் டறந்துநாடி
சூளப்பா அருவியுட தானம் பாரு
சுகுன சுக்ர கிரகமப்போ தோய்யிடமும்பாரு
நாளப்பா அவர்நின்ற குறியைக்கண்டு
நாற்றிசையில் நின்றட்க்கம் நோக்கிப் பூணே.(29)

பூணப்பா தூளிதமும் றீங்காரமெண்ணிப்
புத்தியுட னம்பூதப் பொறியைக்கட்டி
காணப்பா காஞ்சிரவித் திட்டுச்கண்ணை
கமலத்தி லூணியப்போ ககனமார்க்கம்
ஊணப்பா ஓம்கிரணவாயா ஓம்திராணவாயா
ஓம்ராணு யாவென்று நூற்றென்றேது
பேணப்பா கைவாரி சிவனைமுன்னி
ம்பரிதென்றே நம்சிம்வம் மென்றுஊத்தே. (30)

ஊத்திவிடக் கதிரோனும் விழிப்பான் கண்ணே
உனக்குமே தூக்கமிப்போ துலங்குதென்று
பூத்தமலர்ப் பூவதுவு முனக்கேவாய்க்கும்
போக்கப்பா பிறப்பிறப்பு மதிலாகும்
எத்தமென்ற குறியுனக்கு யியம்பக்கேளு
யெத்தொழிலு மித்தொழிலுக் கிணையாகாது
சாத்திடுவே னுன்றனுக்கு மனக்கண்ணாணிச்
சாதசிவத்தின் பிறைகிரணஞ் சாற்றக்கேளே. (31)

கேளப்பா அந்திசந்தி மத்தியென்றுங்
கிளம்புகின்ற திங்களென்ற கிரணந்தன்னை
தூளேநீ சோதிமக மூப்பூர மவிட்டஞ்சித்ரை
துலங்கின்ற விசாகத்தின் பீடங்கண்டு
ஆளேநீ சுக்கிர னு மகரங்கும்பம்
ஆனவிருச் சகமேஷ ரிஷபம்பார்த்து
வேளேநீ புனலாடித் தம்பித்தந்த
விர்த்தியுள்ள சந்திரகிர ணத்தைப்பூணே. (32)

பூணுகின்ற யோகசந்திரம் கலையைநாடிப்
புணருகின்ற வாசிநிலை மடக்கிஊது
காணுகின்ற நட்சேத்திர ராசிசேர்த்துக்
கடுமோன் பதனிலியக் கருதிநின்றால்
ஊணியந்த ராசிகொண்டு கிரகவேதை
ஊமாயாவாயா சந்திராயா வென்றிருபத்தொன்று
காணுமிப் படியேழு தாமேபாணி
கருதியதை விடத்துலங்கும் கிரணக்கண்ணே. (33)

கண்ணுன மனக்கண்ணுவு கிரணமூணக்
கருதிய சந்திரகலை காட்டும்பூர்ணம்
ஒண்ணுன கலைக்குறியும் யோகவாசி
ஒடுங்கிநிற்கும் பலகுறியும் உனக்கேவாய்க்கும்
பேண்ணுன ரோகணியாம் கலைகுறைந்து
பிரித்திரவைப் பூரணச்சந் திரனுநீக்கும்
எண்ணுன தீட்சைவிதி யிவ்வாறுகண்டாய்
இகபரத்துப் புனிதற்கோ யின்னங்கேளே. (34)

இன்னங்கேள் சண்டீசா நன்ருய்ச்சோல்வேன்
இமையமேன்ற துருவத்தின் சூட்சங்கேளு
முன்னுமேன்ன பின்னுமேன்ன தள்ளித்தள்ளி
முன்னீரேட்டு மோனமேன நீக்கிநீக்கி
தன்னறிவாந் தன்னறிவில் நடத்தைகாட்டும்
தானதனைச் சாதகமாய்த் தரிக்கவேணும்
சன்னதமாந் துரியமேன்ற துரியக்காட்சி
சதாநிதமே பூணவோரு தவறிராதே. (35)

ஈராதே பஞ்சகிர்த்ய யோகசாதனம்சேய்
இனமனே புனே யேன்ற நவத்துக்குள்ளோர்
தூராதே ஐம்பூதந் தன்னிலோன்று
துலைகின்ற சேத்துமத்துக் குதவிதூர்வம்
ஏராதே யோகவரை மட்டு ங்கட்டும்
ஈனசுர வாகனப்பேண் ணுத்தாள்வாழ்வு
கோராதே கமலாக்கினி யோகம்பண்ணு
கூடுமேந்தத் துருவத்தின் குணத்தைப்பாரே. (36)

பார்த்துருவ பீடத்தின் தானஞ்சோன்னேன்
பணிவதற்கோர் மூலமது பாருபாரு
காருமோரு சிரவணத்தின் திங்களோன்றிற்
கனபூர்வ பட்சத்தில் நவமிநாளில்
ஏருமந்தக் கதிர்நாளும் மகமும்பாரு
இறப்பிறப் பற்றசேடி நீழல்கோண்டு
சாருமந்த யிடந்தனிலே யேமகூடம்
தன்முகமாய்த் தானிருத்தித் தப்பித்தேரே. (37)

தேரேநீ புவனயா போகனயா
    தருவாயா வென்றேது ஐந்நூற்றேழு
சேரேநீ சேபித்திடவே தருவகாதன்
    சிகரகிரி வெள்ளிகிரி யுச்சிகாட்டும்
பாரேநீ விழிமலர்ந்து ரம்யம்வம்மென்றே
    பற்றிமந் திரத்தையைந்து ஒதிநிற்க
பாரேநீ சேடியதுவும் பலித்துப்போச்சு
    பரமனரு ளுனக்காச்சு பற்றுபோமே. (38)

போமந்த மூலியுட் பொருளின்சூட்சம்
    புகட்டுகிறே னகாரமது தனிலேகாணு
ஏமந்தப் பிறப்பற்ற மூலியாலே
    யெப்பொருளு மெய்ப்பொருளா யிருக்குங்கண்டாய்
போமந்தத் துர்கிர்த்திய கடாட்சமீறிற்
    போதமந்த அஷ்டாங்க யோகங்கிட்டும்
தாமந்த சத்திசதா சிவமுருத்திர
    தழற்கண்ணே விண்ணுமண்ணும் பொன்னதாமே. (39)

பொன்னுன வேதமுடன் கீதம்வாய்க்கும்
    புராணமுடன் பிராணகிதம் பொருந்திவாழும்
ஒன்னுன முதற்கேள்வி வாசனேசம்
    ஊர்வனமு முரைசாதிக் கூர்மையாகும்
தன்னுன நீர்களில்வாழ் பெருமைவேறு
    சாய்கதிரின் கிராணம்போற் சாயவேணும்
என்னுளு மிப்படியே யெய்த்தோர்க்காகும்
    இயம்புகின்ற பொருள்சூக்ஷம் யீசனுமே. (40)

ஈசனும் அஷ்டதிசை அஷ்டாங்கயோகம்
    இணங்குதற்கு யா னுரைப்பேன் சண்டீசாகேள்
வாசனு மிந்திரன்தீ யெமன்நிருதி
    வருணன்வாயு குபேரனீசான்யனுகும்
தாசனு மிவரெட்டும் பதவியான
    சாந்தகுண மவைகளுக்கோ சத்தியெட்டு
காசனு மஷ்டகோண ரிஷியென்பேரன்
    காலனுல் மாளாது காணுகாணே. (41)

காணுதற்கு யானுரைக்குங் கருத்தைக்காணு
காலனுனைக் கீடாமோ கமலனுவாய்
தாணுதற்குச் சத்திமதம் சமயமதமாகும்
சாஸ்திரமதம் தான்யமதம் தன்மமதமாகும்
நாணுதற்கு யெப்பொருளும் உணர்வாய்க்கொண்டு
நால்மூல முரைத்திடுவேன் நன்ருய்ப்பாரு
பூணுவா யீசாயம் வாமாயம் தேவாயம் பூதாயம்
பூர்ணுயம் தம்மாயம் சும்மாயம் கோருயமாமே.

ஆமெனவே தூர்வாயாம் சேர்மாயம்சுக்கி
லாயம்பிர ணுயம்பிரா ணூர்த்தாயாமென்றும் [யா
நாமெனவே நாமாயா நமச்சிவாயாகாளகண்டகன்னிகா
ரவியாயா சோமாயா ஓம்திரிசங் கற்பசிவசிவவென்ருேது
ஆமெனவே யிருபத்தோ ருருவையோதி [மோதி
ஆதியந்தக் கூடதனில் அரிசிவமசிபோயிம் மூல
ஓமெனவே ஓம் சமாவென் ருேதிப் பார்த்தால்
உதயமப்போ அஷ்டசித்தி யுனக்குத்தானே. ()

தானப்பா மூலமந்திரமேழுக்கும்நாதம்
தப்பாமல் ஓசையது கபாலங்கிட்டும்
வானப்பா செவியிரண்டுங் கரமடைத்து
வாக்கோசை நரம்படா வாரிவிள்ளும்
நானப்பா உந்தனுக்கா யெடுத்துவிட்டேன்
நாயகியாள் கமலமது நம்பிப்பூணு
பானப்பா பருதியுனக் காளாய்ச்சத்த
பாரிஷமுங்யேறு பரமனுமே. (44)

நாமென்ற நாமத்தை நருக்கித்தள்ளு
நலமான மூலாக்கினி தீபாக்கினிதள்ளு
தாமென்ற யீசானங் தற்புருடம் அகோரம்வாமம்
சத்தியோ சாதமுகமைந்துந்தள்ளு
வேமென்ற வாக்குபஸ்தம்பாதம்பாயுரு
மிகுபாணி யிந்திரிய மைந்துந்தள்ளு
பாமென்ற கோலகளவு பொய்காமங்கள்ளு
பகரும்பா தகமைந்துஞ் செறிந்துதள்ளே. (45)

செறிவதென்ன யிக்குறிகள் விண்டாஞசான்
சிவசிவா சொல்லிவிட்டேன் தொண்டன்நந்தி
முறிவதென்ன அவள்பதத்துக் கடுமையாகி
மூலாதி மூலம்விண்டேப னுந்தனுக்காய்
செறிவதென்ன முன்சாபம் கண்டிருந்தும்
செறிந்துவிட்டேன் மனக்குறிப்பு அறிவுப்பூட்டை
போர்யடக்குஞ் சண்டீசா மனக்கண்ணேடு
பூதமைந்து மடங்கவிதை யடக்குவாயே. (46)

அடங்குவது உன்பெருமை யாத்தாள்பாதம்
அதத்திலுணர் உடையவனே ஆசாஞசான்
தடங்குவது சத்தபரிசரூபரசகெந்த மைந்தும்
தப்பாது வெளிவிட்டால் தங்குஞ்சாபம்
துடங்குவது புசுண்டமுனி வாக்குப்போல
துடர்கபால கிரியீசர் சொன்னூர் முன்னே
பட்டங்குவது பொல்லாத ரகஸ்யவேதம்
பாரிலிதை விள்ளாதே பதனம்பண்ணே. (47)

பண்ணுவது யோகசித்தர் கடமையாகும்
பாலிப்பார் நாதாக்கள் தகமையாகும்
எண்ணுவது யோகவகை சீஷர்க்காகும்
இருப்பிடமே காட்டுவது தவத்துக்காகும்
கண்ணுவது குறிகண்ணே மனக்கண்ணுகும்
காஷாயம் பூணுவது ஊணுக்காகும்
ஒண்ணுஒண்ணுக் காகஒண்ணு வொவ்வொன்றெண்ணு
யுகமுடிவு திறப்படுதோன்று மூலியோண்ணே. (48)

ஒண்ணுன மூலியதின் பெருமைமெத்த
உலகமென்ற யேழுலக முண்டாமூலி
பெண்ணுன ஆண்பெண்ணுய் விளங்குமூலி
பெருமைபெற்ற முப்பூவு முண்டாமூலி
வண்ணுனு மாவதுவே பஞ்சமூலி
வானவர்கோ னிமையவர்க்கும் வாய்த்தமூலி
கண்ணுன நீலகண்ட ருண்டமூலி
காய்பழமாம் பழங்காயாம் கந்தமாமே. (49)

கந்தமென்றாற் கந்தமதுக் காகும்நாமம்
ககரமதிற் பதிமூன்றும் மூலியென்றும்
தந்தமென்றார் கந்தத்துக் காதிகொண்டு
தவறாமல் முதற்கிழங்கு முண்டாமூலி
இந்தமென்ற லகரமதிற் பத்துமூன்றுந் தள்ளி
யிதமான யெழுத்துநால் மூன்றுமூலி
பந்தமென்ற வரலாறு பகர்ந்தமூலி
பஞ்சாங்க பாஷாண மூலிதானே. (50)

மூலிமுதற் கிழங்குமப்பா வரிவேர்தானும்
முடிந்தணலி வாழ்வதுவும் முடிந்துபோச்சு
மூலிமுதற் கிழங்குதசை தோலெழும்பு
முதிர்ந்தநிணம் பத்துமப்பா முடிவுகாணூர்
மூலிமுதல் தளர்ந்தமங்கை செங்கையோடே
முடிதரித்தாள் மாலயனு மூலகத்தோரும்
மூலிமுதற் கிழங்குமதத் தந்தம்வாழும்
மூதண்ட கோடியெனத் தரித்தநூலே. (51)

நூலென்றால் நவலவல்லோ நூலின்பிண்டம்
நகர்ந்தவனே கண்டறிவான் நூலின்பிண்டம்
பாலென்றாற் பாலுமல்ல நூலேபாலு
பகுத்தறிவார் காணுவது பரமநூல்பார்
தோலென்றால் தோலுமல்ல தோலின்கூறு
புதால்நூலு மொன்றாகும் தோந்தம்பாலு
காலென்றால் காலுமல்ல தோல்பால்நூலும்
கலந்திருக்குந் தந்தமப்பா காணுகாணே. (52)

காணவே வேணுமென்றால் யோகம்வேணும்
கருவுதித்துப் பிறந்திருக்கும் தூலசூக்ஷம்
பூணவே வேணுமந்தத் தியானசூக்ஷம்
பொருளறமுங் கண்டேறித் தள்ளவேணும்
ஊணவே வேணுமந்த சிகாரத்துச்சி
ஊமையெனு மிருப்பிடத்தை உருத்தவேணும்
நாணவே காணுமந்தச் சுவாசசூக்ஷம்
நாடாத நால்வரையும் நாடியுண்ணே. (53)

உண்ணுமுண்ணு மெண்ணமெல்லாம் பொய்யாம்பொய்யாம்
ஊணுறக்க மானதெல்லாம் பொய்யாம்பொய்யாம்
கண்ணுமென்ன விண்ணுலக வாழ்க்கைபொய்யாம்
கசடர்கட்கு ஞானமது பொய்யாம் பொய்யாம்
பெண்ணுமன மாயைக்குப் பொய்யாம் பொய்யாம்
பேய்ப்பருத்தி யாடையணி பொய்யாம்பொய்யாம்
எண்ணுமனக் குறிகாண்பான் பொய்யாம்பொய்யாம்
ஏழுலக மாடும்பொய்ப் பாண்டமாமே. (54)

பண்டமென்ன பண்டிதர்செய் மாயபந்தம்
பரமான பொருளறியப் பயனைக்கேளு
அண்டமென்ன அண்டமென்று உரைப்பார்கோடி
அய்யய்யோ அண்டமெங்கே யறியார்பாவி
பிண்டமென்று முதற்பிண்ட மென்பார்கோடி
பேய்கூத்துப் பிண்டமென்ற பெருங்காணூர்
கண்டமென்ன கபாலமது வென்பாரையோ
கருத்தொழிற்துச் காமப்பால் காணுந்தானே. (55)

காணுவது பூரமென்றாற் பூரமல்ல
கட்டாணி லிங்கமது லிங்கமல்ல
பூணுவது வீரமென்றால் வீரமல்ல
பொல்லாத பாஷாணம் வெள்ளையல்ல
நாணுவது சாதிலிங்கம் லிங்கமல்ல
நாதாந்த நாதமது நாதமல்ல
கோணுவது கோச்சியிட்ட வீரமல்ல
குறைந்தகோம்புப் பாஷாண மல்லதானே. (56)

தானென்ற முப்பூவும் உப்புமல்ல
சார்ந்தகரு வுப்பதுவும் உப்புமல்ல
ஊனென்ற உடற்கருவும் உப்புமல்ல
ஊட்டுமுறை செய்வதுவும் உப்புமல்ல
மானென்ற மண்ணுப்பு உப்புமல்ல
மாதவிடா யானதுவும் உப்புமல்ல
சானென்ற சவுட்டுப்பு உப்புமல்ல
சாதகமா யிவையுப்பு அல்லதானே. (57)

உப்பு அறியவும்

உப்பென்று சொல்வதுவும் பொய்யாதய்யா
உடலெடுத்த அமரியுப்புக் காணூர்காணூர்
சப்பென்றும் உப்பென்றும் உருசிகாண்போர்
தானறியா மூடருக்குத் தருமோஉப்பு
அப்பென்றுங் கைப்பென்றும் அறியாருப்பை
அறிவுதரும் உப்புண்டு மயக்கமானுல்
உப்புப்புக் காணுது காணூர்மாயம்
உ-அ-ச உப்பிருக்கு மூலகந்தானே. (58)

உலகமதி லறைந்தஉப்பு மாயம்மாயம்
உதையபிண்டம் ஒன்ருன வுப்புக்காயம்
சலமதிலே விளைவுப்பு சகஸ்திரமாகும்
சண்டாள சடலமது தப்பித்தேகும்
பலதேக மகலாமல் வாய்க்கும் வாய்க்கும்
பாலவுப்பு பாலவுப்பு பாதைகாணூர்
கலகலேனு மமுதுண்ணும் உப்பா மந்தக்
கையடக்க மரிந்தததனைக் காணூர் பாரே. (59)

விபரம்.

பாரேன்ருல் தோணுது தோணப்'பின்பு
பகருகிறேன் பரிவான பாசமத்து
காரேன்றேன் நாளுக்கு நாளா மந்தக்
கமலமுறை வாணியைநீ கசக்கி யுண்டால்
வீரேன்றே கதரியவ ளளிப்பாள் நாதம்
விடமிருக்கு மிடமப்போ விள்ளும்விள்ளும்
ஊரேன்ருல் உனக்கந்த உப்பு மாதும்
உரைத்தபடி சதஙவய உரைந்து போமே. (60)

போமென்ற யெத்தொழிழுஞ் செய்யும் பொய்யே
பொன்மயமாய்ச் செய்வதுவும் பொய்யாம் பொய்யாம்
ஆமென்ற அறுபத்து நாலும் பொய்யாம்
அதுவாகு மிடமறியா வரசன் பொய்யாம்
தாமென்றே ஓதிவைக்கும் குருவும்பொய்யாம்
தருவான மூலிசொல்வா னவனும் பொய்யாம்

ஓமென்ற மூலெழுத்தின் மூலி காணார்
ஒகோகோ உலகமப்பா உதிர்ந்து போச்சே. (61)

போச்சுதப்பா சண்டீச முனியே கேளாய்
புகழ்முல்லை மணவாளன் போதத்தாலே
காச்சுதப்பா நாளேறிக் காமம் பூண்டால்
கடற்றுரும்பாய் மண்டூக மானதையா
ஏச்சுதப்பா யிச்சாசத்தி கிரியாசத்தி ஞானசத்தி
யிதுமூன்றும் வாயாம லிகழ்ச்சியாச்சு
வாச்சுதப்பா கலியுகத்திற் கபாலருத்ரி
வானவர்கோன் விண்ணோர்க்கும் வழங்கத்தானே. ()

வழங்கவென்ற மூலியதை வளப்பதாக
வைத்திட்டார் மயக்கமதாய் வானோர்காணப்
பழங்கனியாய் பச்சிலையும் பவழப்பிண்டம்
பனிவெடிப்புத் தந்தமுடன் பகர்ந்தமூலம்
தழதழப்பாய்ப் பரிமளிக்கும் மலர்தோற்கப்பித்
தானணிந்தார் பிரமனயன் முதலானோர்கள்
அழலழலா யண்டமது மறைத்துவைத்தார்
அய்யய்யோ அண்டகரு வுதிரமாச்சே. (63)

உதிரமென்ற அண்டமது அதுவேயாகும்
உயர்ந்தபஞ்ச யிந்திரிய மதுவேயாகும்
முதிர்ந்ததந்தி முன்னுரைத்த தறுபதாகு
மூதண்டஅண்டமென்ற நாமமாகும்
கதிர்மதியோன் காணாத அண்டமூலி
காலனுக்கு உகந்தகரு நிணத்தின்மூலி
எதிர்சடையான் மானுக்கா யெடுத்தமூலி
யெம்பெருமான் தயக்கமிட்ட யேமந்தானே. (64)

ஏமந்தான் அண்டத்தி லிருக்கும்வேதை
யெத்தொழிலும் மாரணத்துக் கேதுவப்பா
நாமந்தான் சீராமன் அமுதருந்தி
நடுவோடை நகர்ந்ததொரு ரேகைமூலி
ஓமந்தச் சிவனணிந்த மாயமூலி
உயர்காரி கேற்பமென்று உரையுமூலி

சாமந்த மூலிக்குப் பிறப்போ அண்டம்
தப்பாது உயிரதுக்குத் தாம்தானுமே (65)

நாமதின்கூர் உரைத்திடுவேன் மயேசனப்பா
நகைத்திருப்பான் யேனென்று நவிலக்கேளு
சாமதின்கூர் விண்டுதேரிந் தறிந்தாலே
சண்டீசா யிக்கருவுக் கிட்டசாபம்
போமதின்கூர் தெரிந்ததினுர் சண்டீசாதா
புகட்டுகிறேன் மாயத்தைப் பூட்டுநீக்கி
நாமென்ற நாமத்தை மாத்துப்பண்ணு
நம்மதேன்று யிக்காயம் நாடிக்கேளே. (66)

கேளேமுன் சதுர்த்திவரை தவணைதாண்டில்
கிளர்சமய பாஞ்சசன்ய சித்தனை
வேளேசெய் மாணிக்க வாதவூரான்
விஷமுண்ட கண்டனடி விளங்கும்வெள்ளி
கோளகிரி வாசமிட்டு வாழும்நாளில்
கொடுமைசெய்யு மீரைந்து சிரத்தோனுக்காய்
மீளவிமை யரனயன்மால் விளம்புமூலம்
வினவியவன் விண்டதினல் விடுபட்டானே(67)

பட்டானே சத்தியுமை சாபத்தாலே
பாருலகில் மானிடராய்ப் பிறந்துகாலம்
விட்டானே பூங்கோடிக்காய் உமையிரங்கி
விடுவித்தான் சாபமப்போ வித்தாம்சாஸ்திரம்
கட்டாகக் கட்டியதைக் குருக்கிமுன்றிற்
காணுதற்குப் பொருளறியப் பகர்ந்தநூலு
தட்டாதே கேட்டியப்பா தரிக்கும்நூலு
சாஸ்திரவான் தரிக்கும்நூல் சாபந்தானே. (68)

சாபமதைக் கண்டிருந்தும் விண்டேனாலில்
சற்குணத் துள்ளசண் டீசாகேளு
பாபமது மாலயனுங் காணுநூலு
பரமனணி முப்புரிநூல் பாரிலுண்டு
சாபமென்ற சாமளையாள் அரனுக்காக
தான்மறைத்து,வைத்தசங் கற்பநூலு

தாபமதைக் கண்டுனக்கு உரைப்பேன்வேதம்
தரணிதனில் விண்டால்நீ சவமதாமே. (69)

தாமேதாம் தானவனுந் தனக்குத்தானும்
தந்தைதமக் கருக்குருவாம் தமக்குத்தாமாம்
வேமேதான் கருத்தானும் ஒளித்துவாசி
வேகமென்ற பூட்டதனைப் பூட்டித்தந்த
சாமேதான் மனப்பூட்டுத் திறந்துசார்ந்து
சதாகாலம் யோககும்ப பூரணத்திலூணி
நாமேதான் சிவந்தமுதற் கிழக்குபூசை
நாட்டினின்று னுனக்காகும் நவில்வேன்தானே.

தானேன்ற தம்பத்துக் காறுவேணும்
தவமதற்கு நவம்வேணும் தானடைத்து
ஊனேன்ற சடத்துக்கு உருப்புவேணும்
ஒன்றிரண்டாம் பத்தேழும் பனிரெண்டுவேணும்
கானேன்ற அண்டபிண்டக் கருக்காணவேணும்
கபாலமப்போ திறக்குமந்தக் குரும்பைவேணும்
வேனேன்ற தந்தம்நூல் தோலும்வேணும்
விளங்குமப்பா யிதுவிருந்தால் வேதையாமே. (71)

ஆமேதா னண்டத்தாற் கோடியாகும்
அதின்பெருமை மேத்தவுண்டு அறியவேணும்
சாமேதான் முதற்கிழங்கு தன்னிற்கோடி
சாதுமப்பா யேட்டேட்டும் சமர்த்தாம்வேதை
காமேதான் கர்மத்தா லாடுதற்குக்
காடிந்த நூலாகும் கனிகாயாகும்
ஆமேதான் அதின்பத்திரி தோலுமுப்பாம்
அப்பனே பண்டிதனுக் காதிதானே. (72)

ஆதியென்ற மூலமிது உனக்குரைத்தேன்
அப்பனே அதிற்சேர்க்கை அறிவிப்பேன்யான்
சாதியென்ற சரக்குமறு பத்திநாலுந்
தப்பாது மணியாகும் சாம்பலாகும்
சோதியென்ற சிவகாமி பாய்ந்தரத்தம்
சோலிக்குமது மாரணத்துச் சோரூபமாகும்

நாதியென்ற நாதாந்தம் நமனுக்காகும்
　　நலிந்தகனி யுப்பதுக்குச் சோதிதானே. (73)

தானென்ற பஞ்சகரு வுப்புமாகும்
　　தன்வயித்தின் தீபனத்தைத் தள்ளிவைக்கும்
வேனென்ற புயல்வெடிப்பு கர்பயிந்திரியமாகும்
　　வெப்படங்கும் லிங்கம்வீ ரியமதாகும்
மானென்ற விஷகுளிகை வேகமாகும்
　　மயானமென்ற பூமியதை மாற்றிவைக்கும்
ஊனென்ற உடலுக்கு உறுதியாகும்
　　உத்ததந்தம் குழந்தைதனக் கோத்ததாமே. (74)

தாமென்ற நூலதனிற் சயின்யகர்மம்
　　சாதித்தா னப்பாப்பா சதாசிவமாமூலி
மானென்ற திரிபுரத்தை யெரித்தயீசன்
　　மாளாமல் முடிமீது தரித்தடின்பாரில்
காமனவன் வில்லுக்கோ ராதிமூலி
　　கடுந்தபுஷ்ப மாட்டிவிக்குங் கர்த்தாமூலி
நாமந்த மூலியினு லுன்னைதேற்றி
　　நயந்தகுறி குணங்கண்டு நவில்வேன்காணே (75)

காணந்த மூலியினு லனேகசித்தர்
　　கைகண்டார் கன்னியப்பா கடுரமெத்த
வேணந்தச் சதுரகிரி யுற்றபேர்கள்
　　விதமறிந்து ஆடினதோர் மூலிதன்னை
கோணந்தக் கும்பமுனி யுரைத்தார்வந்திரி
　　கூறினுற் சாபமப்போ கும்பனுதன்
சானந்த மூலியினு லவர்தானிட்ட
　　சாபமப்மா மயக்கமது சாம்பமூலி. (76)

சாம்பலந்த மூலிவர்ணம் பஞ்சவர்ணம்
　　சாற்றக்கேள் வாலையிலே தாஞ்சேனிக்கும்
பாம்பலந்த கருத்தரிக்குங் காலம்பார்த்தால்
　　பஞ்சகர்த்தா ளுருவாகும் பளிங்கிச்சோதி
காம்பலந்த யிரவினிலே சுடரதாகும்
　　கனத்தபிண்டங் காலத்தில் தரிக்கும்பச்சை

ஓம்பலந்தச் சிவசத்தி ஆத்தாளப்போ
உற்பனமா யுதித்தபச்சைப் பூரம்பாரே. (77)

பார்ப்பதற்கு யிக்கண்ணு காணுதப்பா
பஞ்சேந்திரிய சடங்தோணப் பார்ப்பான்கண்ணில்
சேர்ப்பதற்கு முதற்கிழங்கு சார்ந்துதானல்
சிவசிவா துலங்குமப்போ காணலாகும்
பூப்பதப்போ பரிமளமாம் சிறுபெண்ணுத்தாள்
புரிநடன முனக்காகும் பூசைவேணும்
காப்பவனே கண்டறிவான் சிவானந்தமூலி
கயிலையினும் காணுகின்ற கர்த்தன் தானே. (78)

கத்தனென்று லாகுமப்பா லோகச்சித்து
கற்பூரம் பச்சையினுற் காணலாகும்
அத்தனென்று லுனக்காகும் பெண்சள்கோடி
ஆட்டிவைக்கும் இரவுபகல் ஆத்தாளப்போ
உத்தனென்று லுன்னருகில் நடனமாவாள்
உனக்கண்டோ ரிறைஞ்சிடுவா ருலகமெல்லாம்
வித்தனமாய்க் காண்டாய் விண்ணுல கோரைத்தான்
வியசுய சியமுனக்கு வேணுதாமே. (79)

வேணுதென்ன நீவிலக்கிப் பூணக்கேளு
வியர்ந்தவனே சண்டீசா விபரமாகத்
தோணவே அத்தவர்க்குச் சரீரமூன்றும்
துலேந்தகர்ன கபோலகாடமத மூன்றுந்தள்ளு
பூணுதென்ன நிகழ்காலம் மூன்றுந்தள்ளு
புகழ்வதற்கு திருஷ்டிதிதி மூன்றுங்கணும்
ஏணயிய லிசைநாடகத் தமிழ் மூன்றுந்தேரு
யிதமென்ற முக்குணமு மிருக்குந்தானே. (80)

இருக்கவல்லோ வேணுமின்னஞ் சொல்லக்கேளாய்
இச்சகிரி ஞானசத்தி மூன்றும்வேணும்
குருக்கதனு கரணயோக போக்யம்வேணும்
கூருமனம் புத்தியோன்றில் தள்ளவேணும்
நருக்கவல்லோ நாணமட மச்சம்வேணும்
நற்சரா யுசம்யோனி நாலைத்தள்ளு

ஒருக்க ஆகாரநித்ரை ாலுந்தள்ளு
　　ஒகோகோ யிக்குணங்கள் உதைத்தாற்பாரே. (81)

பாருனக்கு உரைப்பதற்குப் புத்திகேளு
　　பரமகுண முடையவனே பாலிப்பார்காண்
மேருனக்குச் சிரமீதி லிட்டவாருய்
　　மிதசயஙயபய வயமென்றே நிற்கவேணும்
தூருனக்குப் பயன்பூரு மைந்தக்கட்டி
　　தூத்திடு கபாலமண்ட கோளத்துள்ளே
வாயமென்ற சுவாசபங் தனமேசெய்து
　　வாய்பிசகா திருந்தாக்கால் வாய்க்குமென்றே. (82)

என்றேனே யிப்பொருளி ளியற்கையெல்லாம்
　　இயம்பினே னிம்மொழியில் விளங்கச்சூக்ஷம்
கன்றென்ற மனக்கண்ணின் பொருளையெல்லாம்
　　காட்டுகிறேன் முந்நூலிற் கண்டுகொள்ளு
ஒன்றென்ற பயனறியா வின்ளாதப்பா
　　உரைத்ததே ரு ஐம்பதிலே யுதிர்ந்துபோகும்
நன்றென்ற யிப்பொருளைத் தேர்ந்தாயானல்
　　நாயகனு மேந்தனுக்கு நந்திவாழ்வே. (83)

வேறு.

வழங்கும் உலகம் வாய்ந்த பொருளினல்
தளங்குங் குருவடி தவிர்ச்சுடு வேடிப்பினல்
விளங்குந் தவிழ்ந்திடும் மிகார கெய்துவார்
இளங்கும் பரமா யிசையிசை சிக்கதே. (84)

சிக்குவார் பூட்டுத் திரிமுகங் கர்ண
இக்குரு வறிய இதம்படு வாராய்
சுக்கதின் குணமே சுகமது காணச்
சக்குரு நாதவிந் ததுகண்ட வாறே. (85)

கண்டரே துருசு கட்டின சுருக்கை
விண்டரே யதனில் வெகுகோடி செம்பொன்
கொண்டரே வெள்ளை கொண்டாட்ட மென்பர்
பண்டரே லிங்கம் பார்த்தறி யெண்பதே. (86)

எண்பதே செம்பயம் யிளம்வெகு கோடி
முண்பதே கண்டு முழத்தனங் கண்டனே
பண்பதே நல்ல பயன்படு காவி
நண்பதே யியம்பும் நற்குறியாமே. (87)

குறியென்ற வுப்பு கோடிபகர் மூலி
வரிவரி பிண்டம் வாகான சாலம்
சரியிடு மையஞ் சனதாது மாகும்
பொரியுல னெடுக்கம் புகழ்ந்தவ ராமே. (88)

ஆமெனச் சூதம் ஆடுதேன் கையில்
ஓமென வேகம் ஒடுது மென்பார்
பூமகள் வாணி பூத்தவ ளென்னிடம்
நாமமென்ற யோகம நாடுமஞ் சனமே. (89)

மஞ்சன அஞ்சன மாயப்பச் சிக்குறி
கொஞ்சன வேதை கொடுமலை போன்னும்
எஞ்சனப் பேண்கள் யிடுதுலை மாயம்
வஞ்சனை யேறி வாயடைப் பாமே. (90)

ஆமே அரானு ரறைந்ததோர நூலைத்
தாமே யெழுவர் தன்னூற் றேர்ந்தே
போமே சமாதிப் பொறிகளை விண்டேன்
நாமே நாமாய் நவின்றேதும் வாரே. (91)

ஓதுவ தரிது ஒருவர்க் காகுமோ
சாதுவ தறிந்து சரியது மெய்யென
வாதுகள் பேசி வரும்பொருள் பறிக்கும்
ஓது பொருளறியார் உயர்காணத் துறவே. (92)

உரவென்ன நேசம் உயர்ந்த சண்டாளம்
மரவென்ன தூரம் மாற்றுவார் பெரிது
சரவென்ன சாத்திரம் தானீவ தல்ல
கரகர வென்பதே காணலாஞ் சோதியே. (93)

சோதி விலகுங் துற்சன குணத்தில்
நீதி விளங்குதல் நின்னயப் பொருள்காண்
வாதியென் றவனே வாயது பதறி
சாதிபண் டிதனே டரியாப் பகையதே. (94)

பகையா மிதுவெலாம் பகர்ந்தனன் யானும்
தகையென் றவரோடு சார்வது நன்றல
மகிமையாங் குணத்தின் வாறுசிக்காமல்
உகமையுனக்குள் ளுரைப்பதைக்கேளே. (95)

வேறு.

உரைத்ததெல்லாம் மானிடர்செய் தொழிலீதப்பா
ஒருபொருளு மறியாத மூடராகும்
நிறைத்தபொரு ளறியாத சண்டிக்காமோ
நிறைந்தமலர் பூரணத்தின் நிலைகாண்பாரோ
கரைத்ததென்ன உரைத்ததென்ன உரைத்தாலென்ன
காணார்கள் காணார்கள் கமலந்தன்னை
அரைத்ததொரு சூக்ஷத்தை யறியாரோடே
ஆடாதார்க் கீயாதபொரு ளாகுந்தானே. (96)

தானேதான் தானவனாய் நந்தியானும்
சாற்றுகிறே னந்தமொழி மூலிசூக்ஷம்
வானேதான் மனதடங்கிக் கொண்டுசார்ந்து
வணக்கமுடன் நீயறிந்து மாற்றிப்போடு
மானேந்துங் கரமிடத்தான் தாங்குஞ்சத்தி
மனோன்மணியை மனதுகந்து மகிழ்ந்துபோற்று
நானேந்துஞ் சகதண்டம் நீயேபெற்று
நடனதிரு வுருக்கலந்து நாடலாமே. (97)

உப்புதீட்சை.

நாடவே வேணுமென்றுற் சொல்லக்கேளு
நன்கறிவால் லவணஞ்சேர் கொண்டுவந்து
கூடவே யாழிநீர் படிதான்விட்டுக்
குமுறவே கரைத்துரவி நவநாள்வைத்து
மாடவே கந்தமென்ற கிழங்குதன்னை
மாற்றுவா யதனுறவி மடித்துப்பின்பு
நீட்டவே நிணமேலம்பு நரம்புதோலும்
நீசதைத்து லவணத்தின் கூடமாட்டே. (98)

MADU ... 109846

உப்பு. மாட்டியே யெரிப்பாய்நீ நிணங்கலங்கி
மடியுமப்போ லவணமது கட்டும்பாரு
கூட்டியே யதைக்கலக்கிப் பாரிலிட்டால்
குமரிகட்டும் பொடியுப்புக் கூரைப்பாரு
நாட்டியே யதையெடுத்துப் பதனம்பண்ணு
நாயகியாள் ரவிசீல கவசங்கட்டி
மூட்டியே சிமிழடைத்து வைத்தாயானல்
மூவுலகும் நீபெறுவாய்மொழிந்தேன்பாரே. (99)

சரக்குகள்கட்ட.

பாரப்பா பலதொழிலும் பார்க்கவேன்றுற்
பணவிடைகால் லவண்கட்டு பகர்மூலித்தோல்
நேரப்பா கவசமிட்டு போக்கினுள்ளே
நீவைத்துத் தணலிடவே நீறிப்போகும்
நீரப்பா பூநீரு நாமமிட்டு
நிச்சயமாய் ஆடப்பா நினைத்ததெல்லாம்
சாரப்பா பலசரக்குங் கட்டுங்கட்டும்
சதமென்று நம்பவிது முப்பூவாமே. (100)

முப்பூ விபரம்.

முப்பூவின் வாறுனக்கு உரைக்கக்கேளு
முதற்பிண்டத் திடப்பிண்ட மூலங்கேளு
இப்பூவின் யிடப்பிண்ட மண்டம்போக்கி
யியலான தலைபோக்கிக் கண்டந்தானும்
செம்பூவின் தசைநரம்பு தோல்மூன்றுங்கூடிச்
சிறந்ததினல் முப்பூவும் உப்புக்காச்சு
இப்பூமி பூவினுப்பு உப்புக்காமோ
யியல்பிண்ட வுப்பதனல் முப்பூவாச்சே. (101)

வாச்சுதென்று மகிழாதே மனம்போல்லாது
வாயாது வாயாது வசனித்தாக்காற்
போச்சுதென்று மவுனமுற்று லுறையுஞ்சூதம்
போருளாகும் மாத்துமிடப் பொன்னும்மண்ணும்
காச்சுதென்று மகிழாதே கல்லதானல்
கண்துலங்கும் பரத்துக்குங் கனியதாரம்
ஏச்சுதென்று புகலுவர் யாவரோடும்
இணங்கினவர்க் குரைத்திட்டா லிதுவும்போமே. (102)

போமென்று யெண்ணுமற் சொன்னேன்புத்தி
போல்லாத சூதருடன் போருதவேண்டாம்
ஓமென்று அந்திசந்தி யாத்தாள்தன்னை
யுணறுவாய் வங்சிங்சங்நங் உங்கேன்றேத்து
வேமென்ற உருநூற்றி யெட்டுமப்பா
விடாமலே செபித்துவர வேணதாகும்
சாமென்ற பாஷாண வெள்ளைதன்னைச்
சாதிக்க வுப்பதனைச் சார்ந்துகேளே. (103)

கேளப்பா மனமடங்கி யோகங்கொண்டு
கிரியையுடன் பூரணத்தி லுறத்துநின்று
நாளப்பா தவருதே பூசையோகம்
நாடினுற் கிடைக்குமப்பா நான்சொல்மூலி
வாளப்பா சொரிவதுபோற் காலங்தோறும்
வாமமாய்த் தியானித்தால் வாய்க்கும்யோகம்
காளப்பா கண்டத்தான் செயலினுலே
காணலாம் பலதொழிலும் கட்டித்தேரே. (104)

பாஷாணக்கட்டு

தேரவே பாஷாண வெள்ளைதன்னைத்
திறமுடனே கட்டியொரு பலமுமைந்தாம்
ஏரவே கொண்டதனைச் சோதிப்பாலில்
யிசையவே கிராசமிட்டு யிணக்கமாக
நேரவே கிழங்கின்சோ ணிதமுங்கொண்டு
நேராகத் தோய்ந்தபின்பு கவசங்கட்டிக்
சேரவே கிழங்கினத்தைக் கவசமிட்டுச்
செப்பரிய கெசபுடத்தில் மாட்டுவாயே. (105)

மாட்டுவாய் புடமேறிக் கட்டியப்பா
மகிமையாம் பாஷாணக் கட்டைக்கொண்டு
கூட்டுவாய் மூலியுட நரம்பினுலே
கூசாமல் அரைத்ததனைக் கவசங்கட்டிக்
காட்டுவாய் காட்டுத்தீ மூட்டுவாய்நீ
காளகண்ட நீருகுங் கண்டுதேறு
பூட்டுவாய் பலதொழிலும் வாச்சுதென்று
பூரணமே மனதிலுன்னிப் பொருந்தியாடே. (106)

ஆடவே வேணுமென்றால் யோகம்வேணும்
ஐம்பதுவுந் தன்மயமா யறியவேணும்
நாடவே சத்திசிவ பூசைவேணும்
நாலைந்துங் கட்டியே பூணவேணும்
தேடவே கன்னமதப் பூவையான
சிறுபெண்ணுள் வாழுமிடந் தெரிந்துநீரில்
கூட்டவே உப்புஉப்பு யெள்ளுக்கொண்டு
குறியான சுண்ணமுமப் படியேகூட்டே. (107)

வெள்ளி.

கூட்டியே பாய்ச்சிடுவாய் செம்புக்கப்பா
கொண்டாடுஞ் சோமனவன் குறிதப்பாது
நாட்டியே நாலுக்கு ஒன்றுதாயாம்
நாமறிந்த குறியிதுநா யகியாள்சொன்ன
பூண்டிதனை விள்ளாதே மூலியாலே
பூண்டதப்பா யிம்மகிமை புகலொண்ணாது
மேட்டிலயன் விடுகுறியி லுரைப்பாயார்க்கும்
விண்டசண்டி னுதனொன விளம்பலாமே. (108)

துருசு.

விளம்பாதே மூலியுட சாபம்மேத்த
விட்டாடும் உன்குலத்தை வெளியாய்ப்போக்கும்
தளம்பாதே குடநீரின் மகிமைபோலத்
தானிருந்தா லின்னமொரு போக்கைக்கேளு
களம்பான துரிசியது கட்டியொன்று
காணப்பா பலமைந்து கொண்டுநீயும்
முளம்பாதே சுக்கிரன்கண் ணுளிந்தமூலி
மூடதனைக் கொண்டுமேற் கவசம்போடே. (109)

போடதனைக் குண்டத்தீ மூட்டினுக்கால்
பொருந்திகட்டிப் போகுமது புகைகாணாது
ஒட்டதனைக் கொண்டீச னெடுத்தகண்டம்
ஓடாது தங்குமது உனக்கேயாச்சு
பாடல்தனைக் கொண்டாடி யெடுத்துமைந்தா
பரமனணி நீருகப் பதத்தைக்கேளு
நீடதனை வாழ்விக்கும் சுகத்தைத்தேடும்
நிலப்பயிரின் கிழங்கினது பிண்டந்தானே, (110)

பிண்டமதாம் முதற்கிழங்கு வரிவேரப்பா
பேசகுடனேகிழங்கதுவின் நவிரங்கோய்து
துண்டதா யூரூத்திடுவாய் சுடுவள்காணும்
தோட்டெடுத்துக் கிழங்கினையே தூளதாக்கிக்
கொண்டமதக் கண்டரதை மாட்டித்தோலால்
கூட்டியே கவசமிட்டுக் குண்டத்தீயில்
அண்டர்பிரா ணுயிர்மாளத் தீயைமாட்டி
அதையெடுப்பாய் வெண்ணீரும் அமலன்நீரே. ()

நீரான துருசுநீர் வேதைகோடி
நிமிளையப்பா அதிற்கோடி நித்தங்கோடி
சீரான தங்கத்துக் கீய்ந்தாற் செம்பாம்
செம்பதை வெள்ளிக்கீயத் தங்கமாச்சு
நேரான தங்கத்தை யெடுத்துக்கொண்டு
நீமனதாய் நந்தியுட மூலந்தேரு
போரான யென்மூலம் நீயறிந்தால்
பிரமனுனக் கீடாகான் பேணிப்பாரே. (112)

பேணுவதே மூலாதி மூலமாகும்
பிரமநவத் தீயானமது மூலங்காணும்
தோணுவதே மனக்கடினம் துலக்கம்போக்கித்
துய்யமதக் கும்பகத்தி லேறிப்பூர்ணம்
நாணுவதே நவமவசிவ குறியைக்கண்டால்
நாடுமப்பா நானுரைத்த மூலிசூக்ஷம்
ஊணுவதே துருசுமப்பா நீந்துமட்டும்
உள்ளபடி வேதையதாம் ஊணிப்பாரே. (113)

பார்ப்பதேன்ன துருசினுட வேதைமெத்த
பார்க்கரிது பார்க்கரிது பகரொண்ணாது
சேர்ப்பதேன்ன நவகோடி சித்தரெல்லாம்
திறவாமல் மயங்கிவிட்டார் துரியமைந்தும்
கார்ப்பதேன்ன யுகமட்டும் வேணுமோ தான்
காலினிடை முடிபோக்கிக் காணுகாணு
தீர்ப்பதேன்ன வகாரமது வுனக்கேகிட்டும்
சிவசிவா திறந்துவிட்டேன் செம்பொன்மேரே.

மேரென்ற மேருவது நீயேயாகும்
மெய்யான மெய்யதுவும் நீயேயாகும்
வேரென்ற வேரதுவும் நீயேயாகும்
விளங்குகின்ற நவமைந்தும் நீயேயாகும்
பாரென்ற பாருப்பு நீயேயாகும்
பஞ்சகர்த்தா ளைந்துபேர் நீயேயாகும்
சாரென்ற சராசரங்கள் நீயேயாகும்
சத்தபரி ரூபரச கெந்தமாச்சே. (115)

ஆச்சப்பா துருசதுவும் நீயேயாகும்
ஆனதோரு சூதமது நீயேயாகும்
மாச்சப்பா கருவியுனக் குள்ளேயாச்சு
மம்நம்வம் சிம்மசியுன் னுருவேயாச்சு
பாச்சப்பா தீயதுவும் மஞ்சமாச்சு
பரமுனக்குக் கிட்டாதே பாவம்போச்சு
ஏச்சப்பா விழியிரண்டுக் கேச்சேயாச்சு
விதுயிரண்டுங் கண்டறிந்தால் யேமமாச்சே. (116)

எமமென்ற வாறுனக்கு யியம்பக்கேளு
யேமமதே விழியிரண்டும் யேமமாச்சு
வாமமென்ற தாமமதே நவமுமாச்சு
மருவிநின்றார் கேள்வியது யேமமாச்சு
தாமமென்ற தாமமதே உந்தியாச்சு
தப்பாது யோகமுண்ணத் தானேயேமம்
காமமென்ற காமமதே மூலமாச்சு
கட்டறுத்துக் கொண்டவர்க்கு யேமர்தானே. ()

தாமென்ற யேமத்தின் குறியைக்கேளு
தானேறிக் குறிகடந்தால் தானேயாச்சு
வேமென்ற ஆங்காரம் விட்டுத்தேர்ந்தால்
விடமுனக்கு வேறுமுண்டோ பொன்னும்வேதை
போமென்ற மவுனத்திற் பூட்டிருந்தாற்
பொருளாகும் உன்மேனி பூக்கும்பிண்டம்
நாமென்ற நாம்சொன்னேம் பிண்டமூலி
நல்குமப்பா யிருந்திடத்தில் நயந்துதேரே. (118)

நயந்தோக் காணுவது யிந்நூலப்பா
நாலாறுக் கீடாகும் நவின்றவேதை
பயந்தோர்க்குக் கிட்டுமிதிற் றூலசூக்ஷம்
பஞ்சவுப்புக் கருவதுவும் பலிக்குமூலி
அயன்தேடி மால்காணான் தரித்தமூலி
அப்பப்பா அரன்தரித்தா னந்தமூலி
முயந்தேறக் காணுமப்பா சத்தியாத்தால்
முடிதரித்தா ளம்மூலி மூலந்தானே. (119)

மூலமென்ற வழலையது மூப்பூவாச்சு
மூதண்டக் கருவதுவு முடிந்தமூலி
காலமென்ற காலனுக்கு மாதிமூலி
கண்டவர்க்கு யெளிதான கமலமூலி
பாலென்றுற் பால்சொரியும் பஞ்சமூலி
பரிந்தேவரும் போசிக்கின்ற பச்சைமூலி
ஞாலமிசை மெத்தவுண்டு நடனமூலி
நவின்றிட்டால் வெளியாகும் நயந்துபாரே. (120)

நயந்தோர்க்குக் கிட்டுமது நல்லமூலி
ஞாலமதில் வேறில்லை நாதாக்கள்வைத்தார்
பயந்தோர்க்குக் கிட்டுமென்று மறைத்துவேறே
பச்சிலையு மண்ணுமென்று பாடிவைத்தார்
கயந்ததோரு கசடருக்காய் காலாங்கிநாதர்
காட்டாமல் மறைத்துவைத்தார் நூல்கடோறும்
நயந்தவனே சண்டிசா உனக்குரைத்தேன்
நாதாக்கள் காணாத நாதந்தானே. (121)

நாதமென்ற நாதமதி லுண்டாமூலி
நாதமென்று சொல்லுவது நாதமாமோ
போதமென்றுற் போதமுண்டு அந்தமூலி
போதமது வேறுமில்லை புகன்றுற் பித்தம்
நீதமென்ற நீத்தினங்க ளுண்டமூலி
நீணிலத்திற் கட்டுமெந்த யெட்டெட்டுந்தான்
வாதமென்ற வாதமதிற் பிறக்குமூலி
வாயாது மற்றொன்றி லாடுவோரே. (122)

வாடுவார் பொன்தேட மயக்கமுற்று
வாட்டுசெம்பு அயத்தில்வெள்ளி அயத்திற்பூண்டை
தேடுவா ருப்புச்சுண்ணம் திகைத்துமய்யோ
தெரிந்துதென்று மெழுகுசெங் தூரம்பார்ப்பார்
பாடுவார் பலபலநூல் கண்டுகண்டு
பாய்ச்சுவார் தேவதைக்குப் பாழாம்நூலு
கூடுவார் மயக்கமுற்றுக் கூடிச்சென்று
குடிகெட்டு நூலறியார் குருக்காணுரே. (123)

குருக்காணு மூடரப்பா கோடாகோடி
கும்பித்துத் தம்பித்து மாண்டோர்கோடி
உருக்காணு மூலியுட பீடங்காணுர்
உலுத்தரப்பா மூலிகையால் மாண்டோர்கோடி
கருக்காணுர் சண்டதுவுங் காணுர்கோடி
கடைகெட்டு வூதிக்கண் போனுர்கோடி
உருக்கலந்த முதற்பிண்ட மூலிகாணுர்
ஓகோகோ சாசளவு பொன்காணுரே. (124)

காணுரே பொன்னென்ற மாயப்பூட்டைக்
காணுவரோ சண்டாளக் குரும்பர்தாமும்
ஊணுரே பொன்னிருக்கும் பீடங்கண்டு
உருவளிக்க மாட்டுவரோ உலுத்தபாண்டம்
காணுரே கண்டெடுத்த போசிப்பைப்போலக்
காயத்திற் நடக்கைகளைக் காணுர்பாவி
நாணுது நாணுது பொல்லாவாழ்க்கை
நாய்கொடுவால் மூடருக்கு நாடாமூலி. (125)

மூலிவிண்டாற் சொரிந்தாடும் உலகமப்போ
முடிந்துதப்பா சத்திபயம் மூழ்கிப்போச்சு
காலிவிண்டால் ஒன்றுமில்லை கட்டையாச்சு
கண்டுகொள்ளு மூலியுட கருத்துமப்போ
நாலுவிண்டா லொன்றுமில்லை யொன்றுங்காணுர்
நாலடங்க நாலுண்டாம் நடக்கும்வேதை
பாலுண்டால் பொருளுதவி பரமுண்டாச்சு
பாலிலொரு பலனுமில்லை பாசம்போச்சே. (126)

போச்சுதப்பா ஆழியும்பொன் மேருஞ்சேர்ந்து
புகட்டுமப்போ சதாசிவமு மடங்கிவேகத்
தோச்சுதப்பா நவகோண சத்தியாகும்
சுழிமுனையும் முனையாகுந் தூலமப்போ
காச்சுதப்பா விண்ணுமண்ணும் பொருளேயாச்சு
கண்ணிரண்டும் மறைத்துமனக் கண்ணதாச்சு
வாச்சுதப்பா சிவானந்தி வாழுமூலி
வாகனப்பெண் ணுத்தாளும் வாய்விண்டாளே.

விண்டவர்க்கே காணுமப்பா வேதைகோடி
வீணருக்குத் தெரியாது வேதைமார்க்கம்
கண்டவர்க்கே காணுமப்பா துருசுயோகம்
காணாது காணாது கசடர்க்காகா
உண்டவர்க்கே காணுமப்பா சூதசூக்ஷம்
ஒருக்காலுங் காணார்கள் உலுத்தரப்பா
தொண்டர்க்கே காணுமப்பா வெள்ளைப்போக்கு
சூதருக்குக் காணாது துலைந்துபோமே. (128)

துலைவதென்ன யிருப்பிடத்தைத் தொட்டோர்க்காகும்
தோணாது துஷ்டருக்குத் தூரமாகும்
அலைவதென்ன வாதமென்ற தறியார்மூடர்
அடக்கமவ ரிடத்திருக்கு மந்தமூலி
உலைவதென்ன உலையிலிட்டு வூதிவூதி
ஒகோகோ கெட்டலைந்த உலுத்தபாண்ட
மலைவதென்ன குகையென்ன வனத்திலென்ன
மாயமென்ன மனம்விட்டாற் காணுந்தானே.

தானென்ற சிவாட்சரமே மூலம்மூலம்
சதாநித்தம் பூரணமே யோகம்யோகம்
வானென்ற பொருளுணக்கே தீபந்தீபம்
வாய்க்குமப்பா சுழல்மூலி வாடைதோற்றும்
கானென்ற ஐம்பூதம் உன்னைத்தள்ளிக்
காட்டிவைக்குஞ் சுழல்மூலிக் கடுத்தவேதை
நானென்றும் நீயென்று மறிந்தாயானால்
நாடுமந்த மூலிகுணம் நாட்டம்பொன்னே. (130)

பொன்னுக்கச் செம்புகொண்டு அலைவார்கோடி
பொன்னிருக்குந் துருசியென்று புகைப்பார்கோடி
என்னுக்குப் பாஷாண வெள்ளைகொண்டு
எடுப்பதற்குப் பொன்வெள்ளி யென்றுங்காணார்
கன்னுக்கும் உலைசூதங் கொண்டுகட்டக்
கண்ணவிந்து கெட்டவரோ கோடாகோடி
ஒன்னுக்கும் அயக்களங்கு கண்டதென்று
ஓடிவிட்டார் சண்டாள ருலுத்தாமே. (131)

ஆமென்ற வகாரசித்து உனக்குரைக்க
அண்டமுக டுருவிடுமே யப்பாசண்டி
நாமென்ற பேரைவெளி விள்ளலாகா
நவின்றபின்பு தெரியுமந்த நந்திமூலம்
தாமென்ற துருசுவெள்ளை சூதங்காணுந்
தங்கமதைத் தன்மயத்தில் தாக்கவேணும்
வாமென்ற சிறுபெண்ணை மயக்கிக்கொண்டால்
வகாரமப்போ சிக்கியல்லோ வாய்க்குந்தானே. ()

தானென்ற வழலையினால் துருசுகட்டி
தப்பாது உப்பாலே நீற்றிக்கொண்டு
வானென்ற சுண்ணந்தங் கத்துக்கீய்ந்தால்
வாய்க்குமப்போ தங்கமது செம்பாஞ்சுண்ணம்
கானென்ற வெள்ளிக்குச் சுண்ணமீந்தாற்
காணுமப்பா ஆறேழு மாற்றுக்காணும்
நானென்று சொல்வதுக்கே மாளாதப்பா
நாயகியா ளுறவில்லாமல் நாடாதாமே. (133)

நாடாது பூரணமே யில்லாவிட்டால்
நாதாக்கள் யோகங்கள் காணுவிட்டால்
ஓடாது பஞ்சகுறி தப்பிற்றானால்
ஓகோகோ ஒன்றுமில்லை ஓடிப்போச்சு
நாடாது முத்தொழிலும் நடனங்காட்டும்
நாயகியாள் தனைவெறுத்து நடனப்பூட்டைக்
காடாகத் தான்செபித்துப் புதைத்துவைப்பாள்
கனகமென்ற வேதையைநீ காணமாட்டாய். (134)

காணாத மூலியுட சூக்ஷமப்பா
கண்டறிந்தாற் காணுமையா கனகமப்போ
வீணாகத் துருசுகொண்டு அலைவதேன்ன
வேதையுனக் காகாது வெறும்பேச்சாச்சு
பூணான சூதமது புகைந்துபோச்சு
போய்யாச்சு பாஷாணம் பூத்துப்போச்சு
கோனான மால்தெரிக்கு மந்தமூலி
கொடுமுடிபோல் வேரோடுங் குளிர்ந்தமூலி. (135)

மூலிவிள்ளக் காட்டுகிறேன் பின்னையப்பா
மூகடையுனக் கறிவித்தேன் தெளிவதாக
பாலிகுண சாலிதய வாணிசூக்ஷம்
பகர்ந்தறிந்தால் மூலியிடம் பார்ப்பாயப்பா
நாலிரண்டு மோராறும் ஐந்துமேழும்
நல்லெட்டேட் டும்வாய்க்கும் நானுரைப்பேன்
காலிபல மூலியேல்லாம் காரங்கட்டும்
கட்டினதோர் கட்டறிந்து காணுகாணே. (136)

காணப்பா காரமென்ற காரந்தன்னிற்
காணுமப்பா பதின்மூன்றி லொன்றுதேரும்
தாணப்பா தகரமென்ற தகரந்தன்னைத்
தள்ளிவிடு பதின்மூன்றி லொன்றுதேரும்
நாணப்பா வகாரமென்ற பூட்டிற்காணும்
நல்கிடுவாய் பதின்மூன்றும் மூன்றும்நான்கில்
ஊணப்பா ஒன்றுதள்ளி நின்றபூட்டை
யுகமுடிந்த தேன்றுசொல்லி யூன்றிக்கோள்ளே.

கோள்ளுதற்கு மூலியதாங் குறியைக்கண்டு
குதிகோள்வாய் மனோன்மணியைக் கும்பிட்டேத்தி
விள்ளுதற்கு உந்தனுக்கா யுரைத்தேனப்பா
விள்ளாதே சத்திபதம் உன்மேல் வைத்தேன்
எள்ளுமய மறிந்தவனே சண்டிநாதா
இதைவிட்டாற் போக்குனக்கு வேறேயில்லை
உள்ளுமயம் பிரமயமு முரைப்பேன்கேளு
உற்ற அண்ட பிண்டதலை வாறுதானே. (138)

தானென்ற சகாரமது தோண்ணூற்றென்று
தான் தள்ளிச் சேர்த்திடுவா யொன்று காணும்
கானென்ற நகாரமதைக் காரங்கொண்டு
கண்டுகொள்வா யறுபத்து ஐந்துந்தள்ளி
ஊனென்ற ரெண்டுமப்பா ஒன்றேயாச்சு
ஒகோகோ மூன்றுமப்பா ஒன்றேயாச்சு
மானென்ற மலர்விழியா ளண்டமப்போ
மகிழ்ந்துனக்குத் திறந்துவிட மாயம்பாரே (139)

பாரப்பா அண்டத்தின் கோலுவையப்போ
பராசத்தி மக்களப்பா பார்த்திருப்பார்
காரப்பா அவள்கோலுவி லண்டபாகம்
கணக்கிட்டு முடியாது கர்மிகாணுன்
ஏரப்பா அதுவழியா யூனிட்டாப்போல்
இருக்குமந்தப் பிண்டகோலு வதனைக்காணு
சாரப்பா அவள் புயத்தின் மீதிலேதான்
சார்ந்தவுடன் காண்பாயப் பிண்டந்தானே (140)

பிண்டமென்ற முதற்பிண்டங் கண்டாயானுற்
பிசகாது வாய்திறந்து புலம்புமப்போ
அண்டமது உனக்குதய மானுலப்போ
அசைந்தாடும் மேனியெங்குந் துண்டங் காணும்
சண்டனனு மூனையப்போ சதாநந்தித்தாய்
தான்வணங்க அவள்மூலங் காணவேணும்
பிண்டவிந்தைக் காணுத மூலியாலே
பெறுவதப்பா வேதைபல தொழிலுந்தானே. ()

தொழிலென்று லேத்தொழிலு மிதற்கொவ்வாது
சொரூபவா னந்திகோலு சூக்ஷமப்பா
வழியென்றல் வழலையப்பா அதுவேயாகும்
வாகான நாதமது அதுவேயாகும்
கழிவென்ற கழிவதுவு மதுவேயாகும்
கட்டான வீடமையு மதுவேயாகும்
ஒளிவான முப்பூவும் உப்புமாகும்
ஒடுங்குமையா யெட்டெட்டு மொடுங்குந்தானே. ()

ஒடுங்குவது தருசதனுற் பூர்க்குஞ்சுண்ணம்
உப்புவெள்ளை பிண்டத்தோல் வலுத்துப்போகும்
அடுக்குமென்றே உனக்குரைத்தேன் தெளிவாயானல்
ஆடுமப்பா நவகோண மண்டத்தாலே
கடுங்கோள் போய் சூதருக்குப் பாலனுதன்
கைபிடித்த சூலமெனக் கண்டுகொள்ளு
படுவேதைக் கொடுங்குவதே பாகமாகும்
பயனறிந்தோர் பாலிப்பர் பாஷாணக்கட்டே. (143)

கருவிடையம்.

கட்டுவது பிண்டத்தோல் நீணமுமாச்சு
காயான பின்பதுவே சுண்ணமாச்சு
வெட்டுவது பிண்டரேத்தம் பச்சையாலே
விட்டுதப்பா சூதமல ரதனுலாசை
பட்டுதப்பா செம்பதுவுங் களங்குபோக்கிப்
பதிவான அயமுதலாய்க் காணலாகும்
விட்டுதப்பா உனையடைந்த பாசம் விட்டு
விண்மயமுந் தன்மயமும் உனக்காம் வேதை. ()

வேதைபர வெளியாகும் அண்டபிண்டம்
வெளிகண்டா லுனக்காச்சு வேதைகோடி
ஊதையிலே காணுவரோ பதத்தின் வாழ்க்கை
ஒருக்காலுங் காணுது ஒடிப்போகும்
வாதையினுற் காணுவதே சத்திபூட்டு
வாயாது வாயாது தருசுவெள்ளைப்
பாதையிலே கிடக்குமப்பா வேதைமார்க்கம்
பார்ப்பவனே கண்டெடுப்பான் பதத்தின்பூட்டே.

வேண்டிய கரு.

போடிப்பதற்கு முதற் கிழங்குப் பூகம்வேணும்
பூட்டப்பா கட்டுதற்கு அண்டம்வேணும்
ஊட்டப்ப்பா அண்டத்தின் வழலைவேணும்
ஊண்சதைதோ லெழும்புப்பால் உப்புவேணும்
நாட்டப்பா மர்ய்ப்பதற்குநாவுவேணும்
நாயகியாள் தன்சீலை யீடுவேணும்
கூட்டப்பா யிதுவுனக்கு வாய்த்ததானுற்
குழுருமப்போ பூரணத்திற் குடியாவாயே. (146)

ஆவதுவே மனப்பூட்டா லழிந்துபோகும்
அடக்கமில்லார்க் கணுவளவு மகாதாகா
பாவமென்ன பாவமதாங் கருவழிக்கப்
பலபிண்டத் தலைதரித்த பாவங்கண்டாய்
சாவதுவே மெய்யறிந்து அண்டத்தாசை
சார்கும்தடுப்ப தாகாது சாபம்மேத்த
நாவதுவே நிலைநின்றுற் காணலாகும்
நாடாது சாபமிப்போ நாடிப்பாரே. (147)

பாரப்பா நகாரவட்டம் அறுகோணங்கீறி
நடுவரையுங் கடைவரையும் ஓமதாக்கி
தீரப்பா கோணத்தில் வய-நய-சிய மூன்றும் அக்னி
திறமையுடன் நம்-வம்-உம் மூன்றும் வருணனு
ஏரப்பா யங்-கிங்-சிங் மூன்றும் நிருதியாகும் [கும்
எமகண்ட அக்-இக்-உக் மூன்றும் யீசான்யம்
காரப்பா ருத்ரன்ருத்ரி மயானகண்டம்
காட்டுவாய் கோணநவ சூலம்போடே. (148)

போடுவாய் நடுவரையில் சு-ரி-ந வென்றுமாட்டி
போங்கமுட னேதுவதோ குருவைக்கேளு
கூடுவது ரீம் சூம் ஞம் ஊம் ஆமென்றே
குறிலோரா யிரத்துநூ றுருவையோத
ஆடுவாள் மனோன்மணியாள் ரூபங்கண்டு
ஆர்ப்பரிப்பாய் ரீங்காரவோங் காரமிட்டுச்
சூடுவாய் மலர்ப்பதத்தில் விழுந்துஓதத்
துலங்குவாள் மனக்கசட்டின் சூக்ஷங்காணே. (149)

காணப்பா சண்டீச நாதா நாதா
கமலமது கண்திறக்குங் கதிரோனைக்காணப்
பூணப்பா அம்மொழியா ளுரைப்பாளாத்தாள்
போதுமப்போ உன்மேனி பூத்துப்போச்சு
ஆணப்பா ஆணுமல்ல பெண்ணுமல்ல
அரகரா நாதமில்லா தமைந்தமூலி
காணப்பா உரைத்து விட்டேன் மாயப்பூட்டைக்
கமனுமென்மேல் வஞ்சமிட நவின்றிட்டேனே

இட்டேனே கமலமுறை வாணிபாதம்
இணங்கினேன் பூரணத்தை யோகங்கொண்டு
பட்டேனே யல்லல்வெகு பாட்டிற்சென்று
பாதமங் குசபாச சேங் தூரத்தானை
விட்டேனே தும்பமுகச் சாலைகண்டு
விகண்டமணி பூரகத்தை யோங்கித்தாண்டி
மட்டேறுங் குழலாள்தன் பதம்பணிந்து
மாயமென்ற பூட்டறிந்து மகிழ்ந்து கண்டேன் ()

கண்டனப்பா வழலையென்ற போக்கை யெல்லாம்
கண்டதில்லை யென்கிலுமே வழலைமார்க்கம்
விண்டேனே உப்பென்ற தீர்க்கமெல்லாம்
விதவிதமாய்க் காணவொரு பலனுமில்லை
சண்டாளத் துருசதனற் கோடிகண்டேன்
சண்டிகட்டி நீத்தவில்லை சாம்பலாச்சு
பண்டான பாஷாண வீரம்பூரம்
பார்த்தவித்தை கோடியுண்டு பலன்காணேனே.

காணேனே வேதையுப்பு சப்பாய்ப்போச்சு
கடுந்துருசுப் பாஷாணம் காற்றாய்ப்போச்சு
ஊணேனே சுவாசமது ஒடுக்கத்தாலே
ஒண்ணரையுங் கால்மூன்றும் ஓடிப்போச்சு
ஆணேனே பெண்ணேனென் றறியாப்பூட்டை
அறியாமற் பட்டதொரு கோடியுண்டு
சணேனே முழமேனே வென்றசூக்ஷம்
சாதகங்கண் டவன்கருதி யறிகுவானே. (153)

அறிவாலே காண்பதப்பா சாரப்போக்கு
அறிந்தவனே மூலிகண்டு மகிழ்வுகொண்டு
தெரிவானே மூலியுட காதமப்பா
தெரியாதார் தேறுவரோ சாரப்போக்கை
மறிவதே மாயமப்பா சாரமென்று
மாணவனே காண்பதுண்டு மாயமூலி
பிறிவதே கருணீகச் சாரின் சூக்ஷம்
பிரித்துரைப்பேன் சாரத்தின் பிண்டமூலம். (154)

மூலமப்பா வேறில்லை சாரமூலம்
முண்டமப்பா பிண்டத்தி லுதித்தசாரம்
தூலமப்பா காரமதிற் சேர்ந்ததாலே
துகண்டசத்தி நாதமது சாரமாச்சு
பாலமப்பா வேதைக்கு உனக்குரைத்தேன்
பலதொழிலு மிதற்குள்ளே ஒடுக்கமாகும்
சாலமப்பா வேறில்லை யிதுவேயாதி
சாற்றுகிறேன் விபரமதே சார்ந்தபேரே. (155)

சாரக்கட்டு

பேரப்பா சாரபலம் பத்து வாங்கிப்
பின்கரைத்துப் பாத்திரத்திற் கீழண்டத்தைத்
தூரப்பா அதையுடைத்து நீரைவிட்டுச்
சூழ்கருவை நசிக்கிட்டுத் தீயில்வைக்க
மீரப்பா யெரித்திடவே கட்டிப்போகும்
மிதமான யிச்சாரக் கட்டுமாகும்
நாளப்பா சாரத்தின் போக்கைவிள்ள
நம்மாலு முடியாது நாட்டிப்பாரே. (156)

பாரப்பா சாரமென்ற கட்டுப்போக்கு
பாயுமப்பா அண்டமூ டுருவித்தானே
ஊரப்பா களங்கேறை தெல்லாமாத்தும்
உத்தமனே கற்பமிட்டா லுறுதியாகும்
நாரப்பா மூலியந்த வேகச்சாரம்
நாதமுதல் பலதுககம் ஆதியாச்சு
சீரப்பா சாரமென்ற கெட்டிச்சாரம்
தீர்ந்தவனே காணபன்நந்தி துறவுதானே. (157)

ரசக்கட்டு

தானென்ற சூதமது பலமே கொண்டு
சாய்ந்திடுவாய் முள்ளிக்காய் கசப்புக்கட்டும்
வேனென்ற மூன்றுநாள் ரவியில்வைக்க
விதமான சுத்தியது வாசமப்பா
கானென்ற சூதத்தின் திட்டுப்போகக்
கட்டுமப்பா வித்திலாக்க யில்வித்தாம்
நானென்று சொல்லாதே காயின் சூக்ஷம்
நவின்றனப்பா பொன்மேனிக் காயிற்காணே. ()

காணுவது பொன்னிறமாங் காயின் சூக்ஷம்
கண்டிட்டாற் காணலாம் மூலியாலே
ஊணுவது காயில்கட்டுஞ் சூதத்துக்கு
உடுசீலை முதற்பிண்ட மதனைப்பார்த்து
நாணுவது மற்றதப்பா ஆறும்பார்த்தால்
நங்கையவள் முகமினுக்கைக் கண்டுகூர்ந்து
தூணுவது முன்பின்பார் நிலப்பயிரைத்
துலைத்திடுவாய் துணித்தமான் கீரித்தானே. ()

கிரித்திடுவாய் முதற்கிழங்கு வுருவாய்க்காணும்
கிழித்தெடுத்து அங்கசத்தோ டுரலிலிட்டுப்
பிரித்திடுவாய் மைபோல இடித்துக் கொண்டு
பிசகாமற் கவசமிடு சூதத்துக்கு
மரித்திடுவாய் அணலித்தோல் தீயைமூட்டி
மாட்டிடுவாய் காட்டுத்தீ மாண்டுபோச்சு
எரித்தசிவன் கண்ணுச்சு ஏமமாச்சு
இனிமையுள்ள சண்டீசா எளிதாய்விட்டேன் ()

விட்டனப்பா சிவானந்த மூர்த்திநாதம்
விடுபட்டு அழிந்து கட்டி வேதையாச்சு
பட்டனப்பா ஒருவருக்கும் விள்ளொண்ணாது
பாழாச்சு பாழாச்சு பரமலோகம்
கட்டான சண்டாளக் கசடருக்குக்
காணாது காட்டாதே கக்கிப்போகும்
ஒட்டாத நாதமப்பா உலகநாதம்
உண்பதமுந் தன்பதமு மோடுக்கமாச்சே (161)

ஆச்சப்பா சத்திசிவ மடங்கிப்போச்சு
அரகரா வேதையென்ற வாதமாச்சு
போச்சப்பா பலதொழிலு மிதுவேயாச்சு
பொல்லாத பயல்களுக்குப் புகலொண்ணாது
பாச்சப்பா யோகமில்லா மடையருக்குப்
பலியாது யிவ்வேதை மாயமாகும்
காச்சப்பா கண்துலங்கு மாத்தாள்சொன்ன
ககனமப்பா விள்ளாதே கசடர்க்காமோ (162)

ஆமென்ற சூதத்தைக் குகையிலிட்டு
ஆச்சென்றும் போச்சென்றும் பாகந்தப்பி
மூமென்ற மூலிபத மறிந்திருந்தும்
உதவாமற் செய்பாக மோடிற்றென்பார்
சாமமென்ற சண்டாளப் பிணங்களப்பா
சதாகோடி காலமெல்லாஞ் சார்ந்தாலாமோ
ஊமென்ற குகையூதிக் கெட்டமாந்தர்
ஒருகோடி கணக்கிடவு மோவ்வாதேன்னே ()

ஒவ்வாத வார்த்தையது நிலைப்பதேது
ஊதியே கெட்டமாந்த ருறவாகாது
செவ்வாயாள் கதிர்கிரணத் திங்களாத்தாள்
சிவந்தவளே பிண்டத்துக் காதியப்பா
எவ்வாறும் கண்டவளைப் பூசித்தேத்தி
யிதம்பேசித் தறித்திட்டாற் குருதிதோயும்
அவ்வாறு சவ்வாது கொண்டுநீயும்
அந்தரத்த மதிலிட்வே நாட்டங்கேளே (164)

கேளப்பா குருதியதில் திட்டம்மூன்று
குமரிபோங்கும் வகையறிந்து யெடுக்கவேணும்
தூளப்பா ரவிபடவே சுவரிற்றுனல்
சுகமுனக்கு வேறில்லை சோர்னமாச்சு
நாளப்பா அண்டத்தின் கருவெடுத்து
நாயகியாள் தன்சீலை கவசமிட்டு
மீளப்பா தூளுடனே புழுகு கூட்டி
மீட்டுசேங் தூரிக்குந் தீயிற்றுனே (165)

தானென்ற பிண்டத்தாற் கட்டுமூன்று
சந்தேக மில்லையப்பா சாபம்மெத்த
வேனென்ற குருதியுட் மூலிதானும்
வெளுமையென்ற கலையதனிற் பட்டுதானுற்
போமனென்றுற் போகாது வெள்ளாவியிட்டுப்
புத்தியுட னறிந்துகொள்ளு மூலிசூக்ஷம்
நாமனென்ற குறியெவர்க்குங் காட்டவேண்டாம்
நாயகியாள் பரவசமே நன்மைதாக்கே (166)

லிங்கக்கட்டு

தாக்கவே யின்னமொரு சூக்ஷங்கேளு
சாதியென்ற லிங்கத்தைப் பலமேகொண்டு
காக்கவே யரைக்காணி தூளிற்சேர்த்துக்
கவசமிட்டு பிண்டத்தோல் மூடித்தீயிற்
சாய்க்கவே தணலிடவே கட்டிப்போகும்
சாய்க்காடைப் புடமிடவே தங்கமாகும்
வாய்க்குமே கட்டான லிங்கங்கொண்டு
வாழலாங் கோடிவித்தை வாய்க்கும்பாரே ()

லிங்கமெழுகு

வாய்க்குமே மெழுதுலிங்க மாகவென்றால்
மைந்தனே சண்டீசா மார்க்கங்கேளு
காய்க்குமே வளையல்வெடி கரியுப்போடு
கட்டான சவுட்டுப்பு காந்தியுப்பு
மாய்க்குமே ஐந்துப்புங் காரசாரம்
மகத்தான துருசுவெள்ளை பூரம் வீரம்
தேய்க்குமே சாரமுடன் விந்துங்கூட்டிச்
சிவசிவா வகைக்குபலம் நிறையொன்றுமே ()

ஒன்றான பலமதனைப் பொடித்துச் சேர்த்து
ஓகோகோ என்னசொல்வேன் உம்பர்சாக்ஷி
கன்றான வேதவல்லித் தாயின்நாதம்
காட்டுவாய் பொடியிலிதைக் கலக்கத்தானே
பன்றான பொடிகலந்து நாதத்தோடே
பாய்ச்சுதற்குச் சொல்லக்கேள் பரமயோகி
ஒன்றான ஒன்றல்லோ மகனேயப்பா
உற்றஅண்டந் தனையெடுப்பாய் பத்திதானே ()

அண்டக்கிருதம் செயநீர்

பத்தியாம் அண்டத்தை யெடுத்துவந்து
பாரதனை யுடைத்துமெள்ள மைபோலாக்கிச்
சத்தியாம் மனோன்மணியைத் தியானஞ் செய்து
சதமாய் சிம் யிம் வம்மென் றோதியந்த
முத்தியாம் நாதம்விட்ட பொடியைத்தூவி
மூடுவாய் மேலேயொரு பாண்டந்தன்னை
அத்தியாம் முகவனையே போற்றிசெய்து
அரகரா சவியிட்டுத் திறத்தைக்காணே (170)

காணவே சொல்லிவிட்டேன் வெளிவிடாதே
கனகமுனக் காதியது கர்மநோய்க்கும்
பூணவே ரவியிலிட்ட பொடியைப்பாரு
புகழாக இரவுபகல் நாளுமூன்று
தோணவே நின்றிடவே மூன்றும்நாளில்
துலங்குமப்பா செயநீரின் சொரூபம்பாரு
மாணவே அதைக்கலக்கி யிருத்துக்குப்பி
மைந்தனே பதனமிட்டு வரிசைகேளே (171)

கேளப்பா செயநீரில் நின்றசத்தைக்
கிளர்ச்சியுடன் ரவியிலிட்டு உலர்த்தித்தூளாய்
மீளுமப்பா தூளதனைப் பதனம்பண்ணி
மேன்மையுடன் சீனியொரு பலமேயிட்டுத்
தூளுமப்பா சண்டீசா சன்னிதோஷம்
சோகைபல வாதமுதல் யாவற்றுக்கும்
ஆளுமப்பா வெருகடியாம் பாலிலீய
அப்பனே அவையகலும் வாறுதானே (172)

தானென்ற பத்யம்புளி புகையைநீக்கு
தப்பாது தப்பாது கிருதமப்பா
வானென்ற பலருக்கும் வாய்த்ததிந்த
வகையான அண்டநவ கிருதசூக்ஷம்
மானென்ற யென்னப்பன் யென்தாய்சொன்ன
மர்மமிது விள்ளாதே மாயமாகும்
நானென்ற நிலைமையுனக் குண்டுமானல்
நாயகனே செயநீரின் போக்கைக்கேளே (173)

செயநீர் வித்தை

கேளப்பா செயநீரி லாடுஞ்சூக்ஷம்
கிருபையுள்ள சண்டீச முனியேபாரில்
பாளப்பா கோலைகளவு பொய்மையோர்க்கும்
பராபரியாம் நூல்பாராச் சண்டிகட்கும்
நாளப்பா சென்றுலு மிதனைமைந்தா
நாடாதே நானென்ற வாக்குப்பேசல்லா
கூளப்பா கக்கிவிடும் நாய்போலாவார்
கும்பகமும் பூரணமுங் குறைந்துபோமே (174)

போமென்ற யானுரைத்த மொழிபொல்லாது
போக்காதே போக்காதே புத்திவேணும்
தாமென்ற ஆணுவத்தைத் தள்ளவேணும்
சதாகாலம் பூரணத்தைச் சாரவேணும்
ஓமென்ற சிவாயத்தி னின்றுயானல்
உமக்கல்லோ கிடைக்குமந்த உம்பர்யோகம்
நாமென்றும் தாமென்றும் எண்ணவேணும்
நாதாந்தப் பரவெளியை நாடும்பாரே (175)

பார்க்கவே அண்டசெய நீரிலப்பா
பாய்ச்சுவாய் செம்புமோர் பலமேகாய்ச்சித்
தீர்க்கமென்ற களங்கறயிவ் வாறுமூன்று
செய்தசெம்பைக் காய்ச்சிடுவாய் தட்டித்தட்டி
ஆர்க்கமென்ற செம்பதனைத் தங்கத்துக்கு
அப்பனே ஊட்டிடுவாய் நாலுக்கொன்று
சேர்க்கமென்ற சொர்க்கமப்போ துலங்கிக்காணுஞ்
சீரான செம்பாகுஞ் சூதுகாணே (176)

சூதான செம்பதனைச் செயநீர்விட்டுச்
சுவறிடவே காய்ச்சிவைப்பா யுப்பாய்க்காணும்
நூதான செம்புப்பைக் கலையமிட்டு
நணுக்கமுள்ள தையல்பட்டை வராகனிட்டு
ஊதான கவசமிட்டுச் சீலைசெய்து
ஊதிடுவாய் நாழிகையி லொன்றிலேதான்
வாதான செந்தூர மாகும்பாரு
மகிழ்வான வேதைக்கு மாகுமாமே (177)

ஆமப்பா தீர்ந்திடவே காணும்பாரு
ஆண்மையுள்ள தாமிரத்தின் சோதிக்காட்சி
நாமப்பா புத்திகெட்டு விண்டோங்கண்டாய்
நாயகியாள் திருவாக்கு நாசம்பண்ணும்
காமப்பா லுண்டவர்க்குங் கசடருக்கும்
காட்டாதே மூலியண்டஞ் சாபமேத்த
வாமப்பா செந்தூரம் வாய்க்கும்நல்ல
வார்த்தையுள்ள குணவானுக் காதிகாணே (178)

காணுவது செந்தூரக் காட்சிகேளு
 காயநிலை கண்டவர்க்கே கைகொண்டாடும்
பூணுவது ம்சம்புமோர் பலத்துக்கப்பா
 புகட்டுவாய் செந்தூரம் நாலைத்தானே
பேணுவாய் புரமேரித்த தசமாற்றுகும்
 பெருமைபெற்ற சண்டீசா பொல்லாவித்தை
வாணுவாய் மனமகிழ்ந்து விண்டேனிந்த
 வாக்குதப்பி வெளியில்விட்டால் வாயாதாமே

தாமென்ற நந்திகோலு பிண்டம் பிண்டம்
 தப்பாது அண்டமென்ற மூலிபீடம்
சாமென்ற புவியோர்க்கு யெளிதாமிந்நூல்
 தப்பாது யிதன்திறவு ஐம்பதுக்குள்
காமென்ற கனகரச மானமூலி
 கண்ணான கண்ணப்பா கடினமேத்த
ஊமென்ற ஓங்காரத் தீபங்கண்டால்
 உனக்கல்லோ வாய்த்ததிந்த உறுதிப்பூடே ()

பூடென்றால் நகாரத்திற் பூத்ததுண்டாம்
 புகலாது எவ்விதமும் புத்திவேணும்
கூடென்றுற் சிகாரத்தின் செடியாமூலி
 கூரான நூல்பாராக் குருடர்க்காகத்
தூடென்றால் வகாரத்திற் காயாமூலி
 துஷ்டகுண வான்களுக்குத் தூரந்தூரம்
பாடென்றால் அகாரத்தி லண்டமாச்சு
 பரிவாமின் னுன்குமாதி மூலியாமே (181)

தாமென்ற நம்மதிலே இலையதாச்சு
 தவறுத யம்மதிலே பட்டையாச்சு
போமென்ற வம்மதிலே பூவுமாச்சு
 பொருளான சிம்மதிலே காயுமாச்சு
ஆமென்ற பூவிதமும் அங்கமாச்சு
 அவ்விலது தானாத வங்கமாச்சு
சாமென்ற அண்டமே நங்கமாச்சு
 சதமாகு மண்டரசச் சிங்கமாச்சே (182)

சிங்கமென்ற நவ்வேழுஞ் சூதமாச்சு
சிவந்துவரும் மவ்வேழுஞ் சிவந்துபோச்சு
அங்கமென்ற ரவ்வேழுங் துருசிற்கட்டும்
அகாரமென்ற சவ்வேழும் நீற்றிப்போடும்
மங்கமென்ற ரவ்வேழும் வெள்ளைகட்டும்
மயக்கமென்ற வவ்வேழும் நீற்றிப்போடும்
துங்கமென்ற லவ்வேழும் சாரங்கட்டும்
துடியான ழகாரமு நீற்றிப்போமே (183)

போமப்பா யம்மாறில் வங்கங்கட்டும்
பொல்லாத ஞம்மாறில் நீற்றிப்போடும்
வாமப்பா தவ்வாறில் தீபங்காட்டும்
வளமாக அவ்வாறில் நீற்றிப்போடும்
தாமப்பா ளவ்வாறிற் கெந்திகட்டும்
தப்பாது டம்மாறில் சத்திப்போடும்
ஒமப்பா உம்மாறில் வீரம்பூரம்
ஒடுங்குமப்பா அண்டமது ஒடுங்கிப்போமே ()

ஒடுங்கிப்போம் பலபலவும் மூலியாலே
உகமுடிவு ஆச்சுதப்பா உண்மையாகும்
மடங்கிப்போம் சதாசிவமுஞ் சத்திவாழும்
மாய்ந்துவிடும் மயக்கமில்லை மாயாமூலி
கடங்கிவிடும் அம்மூலி பெயருங்கண்டு
காயசித்தி பத்திமுத்தி கண்டுகாணு
அடங்கிவிடும் அம்மூலி உனக்குவாய்க்கும்
அரகரா பூரணத்தி லமர்ந்துபோற்றே (185)

போற்றுவாய் இம்மென்ற சூக்ஷங்கண்டு
பொறிகளைந்தும் மனமூணிப் பூட்டிக்கட்டும்
மாற்றுவாய் ஐங்கோண வகையிலக்கம்
வாயடக்கங் கொண்டவனே வாமரூபன்
சாற்றுவதே மனமூணிப் பற்றிப்பார்க்கத்
தப்பாது மூலிமுதற் கிழங்குவாழ்க்கை
ஏற்றுவது உன்னறிவே மனக்கண்ணுகும்
இகபரமு முனக்குள்ளே இருக்குந்தானே (186)

தானென்ற மூலியொன்று ஒன்றேயாகும்
தன்னறிவு அறிவதுவே ஒன்றேயாகும்
கானென்ற பொருளறமும் ஒன்றேயாகும்
கன்னியர்கள் நாதமது ஒன்றேயாகும்
வானென்ற மண்ணும் விண்ணும் ஒன்றேயாகும்
வாய்ப்பதுவும் மாய்ப்பதுவும் ஒன்றேயாகும்
நானென்ற ஆணவமே ஒன்றைநீக்கி
நல்குமப்போ சுழிமுனையில் நாதங்காணே (187)

காணப்பா யிந்நூலில் மொழிந்தசூக்ஷம்
கண்டறிவாய் பயன்பொருளைக் காணுயாகில்
நாணப்பா மூலிவழி காட்டக்கேளு
நடுவரையால் நட்னவொளி நாட்டிக்கொண்டு
பேணப்பா கலகலென நடக்கும்வெப்பு
பிடியிடையால் மணம்புரியத் தொண்டைநாட்டில்
வேணப்பா அம்மூலி தெரியாமாந்தர்
விஷங்கண்ட விஷம்போலே விள்ளொண்ணுதே

ஒண்ணுது என்னசெய்வேன் சண்டசாகேள்
உபாசமே நாகமாம் உகாரங்கட்டும்
எண்ணுது யெவ்வாறும் ஏமகூடம்
எக்காலங் காணுவது யிகபரத்தை
பண்ணுது சகலகலை வாணிவாழும்
பதுமமல ருனக்கெய்தும் பரமுமாகும்
வண்ணுனும் வாழ்வடைவான் நாவால்விண்டேன்
வசனிப்ப தின்னுமொன்று வாழ்க்கைபாரே ()

பாரப்பா மஞ்சக்கொடி வழலைபாரு
பரிவான வழலையினுல் விந்தைக்கட்டு
சாரப்பா விந்தாலே துரிசைநீத்து
சதமாயந் நீராலே வெள்ளைநீத்து
தூரப்பா வெள்ளையினுல் சாரத்தை நீத்து
துடியான நீத்தாலே எல்லாம் நீத்து
ஆரப்பா அறிவார்கள் யிந்தமார்க்கம்
அப்பனே சாரத்தாற் செயநீர் செய்யே. (190)

செய்யவே வேணுமப்பா சாரநீற்றைச்
சிறப்பாகப் பலமொன்று பாண்டத்திட்டு
உய்யவே மூலிமுதற் கிழங்கின்மூரல்
உதித்திடுவாய் நசுக்கியதி லொக்கக்கூட்டி
கய்யவே அண்டத்தை யுடைத்துமையங்
கருகயனக் காய்பத்து நசித்துப்பிழிந்து
பய்யவே நீயெடுத்து கலக்கிமூன்றும்
பரிவாகரவியிலிட்டுப் பூட்டைக்கேளே (191)

கேளப்பா சண்டீசா சாதிலிங்கம்
கிரிகையுள்ள கட்டியொரு பலமொன்றாகத்
தாளப்பா அதிலிட்டு ரவியில்வைக்கச்
சாயுமப்பா சத்திகிரி சாய்ந்துபோச்சு
நீளப்பா நாளைந்து பதமாய்ப்பார்க்க
நீண்டகட்டி தான்கரைந்து நீறிக்கட்டும்
சூளப்பா சொல்லாதே யதையுருட்டிச்
சுகமாகு மின்னமொரு சூதைக்காணே. (192)

காணுவாய் உருட்டியதோர் லிங்கப்பூட்டைக்
கதித்தஅயக் கம்பிதனி லரைத்துப்பூசி
ஊணுவாய் எள்ளெண்ணெய் தீபக்காந்தி
யுட்படவே யிளகியது அற்றுவீழும்
தோணுவாய் அம்மெழுகை யுருட்டிக்கட்டித்
தோந்தமுள்ள தாம்பூரச் சிமிழில்மாட்டி
நாணுவாய் வகாரமென்ற சூதுக்கய்யா
நாட்டுவா யிம்மெழுகை நலமாய்த்தானே (193)

தாமென்ற செம்பு அயம் வங்கத்தோடு
தப்பாது பாயுமது சாரங்கேளு
வாமென்ற செம்புசுத்தி மூலியாலே
வாய்த்தாக்கா லிம்மெழுகிற் சொர்ணமாச்சு
போமென்ற வெள்ளிக்கம் மூலிசுத்தி
பொருந்திலுல் மாற்றிலாத் தங்கமாச்சு
சாமென்ற அயத்துக்கு மூலியாலே
தான்சுத்தி யாகில்வெள்ளி தப்பாதாமே (194)

தப்பாது வங்கமப்பா சுத்தியாகிற்
றுணிடவே களங்கற்ற செம்புமாச்சு
ஒப்பாத சூதமுத லோடாதப்பா
உருக்கிடவே நிற்குமந்த மெழுகின்கூறுல்
இப்பாரிற் பண்டிதற்கு நீற்றினங்கள்
இயல்பாகு மிதனுடைய மேன்மைபார்க்கச்
சப்பாணிப் பிள்ளைமுதல் நடக்குங்கண்டாய்
சதாசிவனுஞ் சத்தியுரைத் திடுவாள்தானே ()

தானென்ற இம்மெழுகின் வாறுசொன்னேன்
சண்டாளர்க் குரையாதே சத்திவாக்கு
பானென்ற புருதியுனைக் காணமாட் டான்
பாழாச்சு உன்மேனி பறந்துபோச்சு
ஊனென்ற தேகத்துக் கொன்றுங்காணாய்
ஒகோகோ ஒடுங்கிப்போ மொன்றுமில்லை
சானென்ற அங்கத்தைக் கடைகாணுமற்
சாய்த்துவிடு யென்வாக்கு தப்பாதாமே (196)

தப்பாது இப்பொருளாம் முந்நூறுள்ளே
சாற்றினே யிருநூறில் வெளியதாக
ஒப்பாக நூற்றில்யான் விண்டுசொன்னேன்
உன்னறிவு மனமுண வுனக்கேயாகும்
இப்பாரிற் யாவருக்கும் விள்ளவேண்டாம்
யிகபரமு மிழந்திடுவா யேமன்வாழ்வாம்
செப்பரிது செப்பரிது நூலோயில்லை
சிவசிவா சொல்லுகிறேன் திறமாய்க்கொண்டே

கொண்டாலும் யென்நூலே குறைவாராது
கொண்டவர்க்குக் காணுமது குறிதப்பாது
கண்டாலும் மெய்ப்பொருளைக் காணக்காட்டும்
கசடராய் விட்டாலோ காணார்காணார்
பண்டான விதிவசமோ விட்டவாறே
பாழாகும் மூலிபலம் பாயாதப்பா
சண்டாளர்க் கிந்நூலைத் தந்தாயானல்
தலைவெடிக்கு மாமிந்தக் கர்மமாமே (198)

ஆமிந்த நூலுமப்பா மார்க்கம்போல்லா
அடிதுடங்கி மூலியுட வாறுகண்டாய்
போமிந்தக் கடினமென்ற சூக்ஷஞ்சொன்னேன்
புத்தியுட னுணர்வாலே யுணிப்பாரு
காமிந்தக் காமுகர்க்குக் கழுத்துநூலாம்
கண்ணவிந்து மாய்வரப்பா கடலில்மூழ்கி
நாமிந்த வாறுமப்பா கண்டதாலே
நாட்டினேன் சண்டீசா நாதமாமே (199)

நாதமென்ற விந்துதித்த வாறுகேளு
நல்லஅண்ட பிண்டமென்ற வாறுகேளு
போமென்ற கற்பூரப் பூட்டைக்கேளு
புரிசடையா னணிமங்கைக் குறுதிகேளு
கீதமென்ற அவள்சீலப் பூட்டைப்பாரு
கிருபையென்ற அவள்சிகப்பின் கிறத்தைப்பாரு
வாதமென்ற வாதமது வயித்தியன்கூறு
வாய்க்குமிந்த நூலில்மனம் வைத்துப்பூணே ()

வேறு

பூணே யைந்து பொறிகளங் காமற்
காணே மனக்கண் கள்கூர்ந்திருவருள்
தாணே வேட்கை சச்சிதப் பீடமேல்
ஊணே புத்திகோண் டோடுங்கி யேறிடே. ()

ஏறிடு கம்பத் திறைமுடி வசத்திற்
கூறிடு குண்டலி கொடியேறு பூரணம்
வாறிடும் யோக வழிகடங் தந்த
தூறிவி ஞசனி சுந்தரி வாழ்க்கையே. (202)

வாழ்க்கை யறிந்தபின் மலரிரு பீடங்காண்
ஆழ்க்கைக் கும்பத் ததனிலே சார்ந்தபின்
மாழ்க்கைக் கோடி மான்மூல மேலிட்டம்
பாழ்க்கை வங்கணப் பாய்சத்தி யாதரம். (203)

ஆதா மேவ்விடம் அறிந்துபின் நந்தியின்
பேதமில் வாசி பிரிவினைக் கண்டுநீ
மாதவ ரவ்விட மகண்ட சாலையில்
லாதர வோத்திட வாய்ப்ப தறிந்திடே. (204)

அறிந்திடக் காணு மாத்தாள் மகிமை
பிறிந்திட வேண்டாம் பின்னவே றிலையுனக்கு
சுறிந்தவர்க் கன்புக் காகுமேன் றேன்பது
சேறிந்திட வேண்டாம் சிவமந் திரமிதே (205)

மந்திர மூலமே மாட்சியேன் பதுசீர்
தந்திர சாலமே சதமதுக் கானது
வந்திரப் பூட்டுமே வாய்ப்ப தேப்போருள்
சந்திர சேகரன் தாயுடன் தாக்கவே. (206)

தாக்கிடக் காட்டுஞ் சமத்துள்ள மூலி
வாக்கிடக் காட்சி வந்தருள் செய்யும்
பாக்கிய ம்மன்பது பரிசு மேன்பதே
நாக்கினுட் டுறவுசெய் நல்லுண் ணுவதே. (207)

உண்ணு வேன்பது உயர்மூலிக் குள்ளது
கண்ணு வேன்பது கருந்துளி ராகும்
பேண்ணு வேன்பது பேசும் பிண்டமே
அண்ணு மூன்றும் அறிந்து சேர்வதே. (208)

சேர்வது நக்கத் திரளண்டத் தருவு
கார்வது வதின்கரு கனமுளைப் பிண்டம்
ஊர்வது திங்கள் ஒன்றின் மேலது
சார்வது திங்கள் தன்கரு வாவதே. (209)

கருவது திங்கள் கண்டா ணுகில்
உருவது கமல மூருஞ் சூலையாய்
போருவது வாரிற் போன்னிற மேனி
கருவது பத்திற் காய்முதற் பிள்ளையே. (210)

பிள்ளையைப் பெறுபவர் பேணிய நாளப்பா
கள்ளந் தென்திசைக் கசப்பெனத் தள்ளுவார்
மெள்ளக் குடதிசை யென்றைக்கு மாகா
செள்ளக் கீழ்திசை தேகங் கொஞ்சமே. (211)

கொஞ்சமென் றெண்ணூர் கூடும் வடதிசை
பஞ்சமே யில்லை பறந்தது வறுமை
மிஞ்சிய பிள்ளை மிகவலு வாகும்
சஞ்சல மில்லை சகஸ்திர மூலியே. (212)

மூலியாம் பிள்ளை முதற்பிள்ளை நாளது
காலிநா ளொன்பதிற் கமல மலரும்
வாலியாம் பிள்ளை வயதுபதி னைந்தில்
பாலியாஞ் சட்டை பருத்துதிர் மேனியே. (213)

மேனியிற் சட்டை மிகப்புட னுதிரக்
கானியிற் பல்லும் கழன்றிடும் நாளேறத்
தருணியக் காமத் தருலிங்கம் பருக்கும்
மானியச் சட்டை மறந்து வருவதே. (214)

வருவது திங்க ளொன்றினிற் கள்ளன்
தருவது கண்டு தரிப்பான் தலையவன்
குருவது குருதி கொண்டுணர்ச் சியினில்
தருவது அறிந்தவர் சாம மூலியே. (215)

மூலியே பிள்ளையை முந்திச் சுமந்ததால்
தாலிதன் தாயும் தலைப்பிள்ளை முடிபோய்
சாலியா முண்டத் தன்லிங்கத் தன்பால்
பாலிட் டுடனே பரிவாய் வளர்ப்பானே. (216)

வளர்க்கக் கருத்தினில் வசப்பட்ட பிள்ளை
தளர்க்கக் கருவிட் டாள்தைக் கள்ளன்
களக்கன ளெண்ணிக் கன்னிக் குறவாய்
பளக்கப் பசுநீர் பூய்ந்து வளப்பரே. (217)

வளக்கக் கள்ளனும் வாய்க்கப் பதமறி
குளக்கத் திங்களோ கோலமு மிரண்டாம்
நிளக்க யெண்ணினல் நெறிதப் பாமலே
பளக்கப் பழக்கமாய்ப் பார்த்தரிப் பானே (218)

தரிப்பான் தலைபோய் தான்போன முண்டம்
நரிப்பான லிங்க நாதனை வெட்டி
மரிப்பால் பதனமாய் மாய்ந்து போன்மேனி
இரிப்பாள் பழுத்திட யெடுப்பதா முண்டமே ()

முண்டமாம் பண்ட மூவரு மறிந்தவர்
கண்டமா முனிவோர் காயத்திரி சபத்தோர்
அண்டமர் முனிவர் மாவலி மும்மதத் [மே
தொண்டராம் பலரும் தொகுத்துண்பார் முண்ட

உண்பரே சட்டையை ஒதுக்கி நஞ்சினை
திண்பரே தின்று சேரிப்பதற் கரிதாம்
கொன்பரே திக்குக் கோப்பென மானத்
தன்பரே அவிழ்தத் தயிலமு மாகுமே. (221)

ஆகுமே அவிழ்தத் தருந்தயில் மெண்ணெய்யே
போமே மனச்சூடு போங்கிக் குளிர்ந்திடும்
மாகுமே போகம் மகிமைநற் பாலுண
வாகுமே யாகும் நல்மூலிப் பிண்டமே (222)

பிண்டங் தரிக்கால் பெருவயி ருத்தாள்
கண்டவ றறியார் காணுமற் குண்ணும்
ஓண்டோடி வாடி உயர்பழுப் பேருமுன்
சண்டாளக் கள்ளர் தன்னைத் தரிப்பதே. (223)

தரிப்பரத் தோலினைத் தானுரித் தந்தம்
வரிப்பக் கொண்டதை வாய்க்குநூ லறிகிலார்
சரிக்கத் தரிக்கையில் தான்கட்டும் நூலைப்
பிரிக்க வறிகிலார் பின்னறி வார்களே. (224)

அறிவரோ நூலின் அன்புள்ள பூட்டைத்
தேறிவரோ சட்டையின் சிகாரப் பூட்டுமே
உறிஉறி நாழி வொழக்கழாக் கெண்ணும்
சேறிசேவி டோன்றிரண் டறியார்கள் பாரே ()

பார்தேரி வாரிப் பயனுள நூலைச்
சார்வ தெவ்விடம் தானது மெவ்விடம்
பூர்வ தெவ்விடம் புகல்வதெவ் விடமெனத்
தீர்வ தெவ்விடம் தீர்ப்பதெவ் விடமதே. (226)

மாவ தெப்படி மாண்ட பெண்ணிடம்
போவ தெப்படி பொற்கொடி வாழ்க்கை
தாவ தெப்படி சாஸ்திரத் திலையென
ஆவதெப்படி யலைந்து மாய்வதே. (227)

மாயவர் பிண்டமு முண்ட முந்தலை
சாயல ரலையெனச் சாம்பிண்ட மென்றுமே
ஆயவ ரண்டத்தில் ஆடிக்கண் மாண்டபின்
ஒயவ ரிருப்பிடம் அறியா முரடரே. (228)

முரடர் காண்பரோ முழுமூலி வாறுதான்
திருடர் காண்பரோ சித்தியண் டத்திற்
குருடர் காண்பரோ கோடிநூல் தேர்ந்துமே
வெருடர் காண்பரோ விந்துவின் மூலியே. ()

விந்து பிறந்திடும் வீரிய மறிவரோ
கந்து பிறந்திடம் கண்டுணர் லிங்கமே
தந்தநூல் பிறந்திடும் தானறி யாமலே
சந்து போந்துதா னழிந்து வெந்ததே. (230)

வெந்தவர் கோடியாம் வேதையிற் சிக்கியே
வந்தவர் கோடியாம் மயில்வெள்ளை கட்டினால்
பந்தவர் கோடியாம் பறந்தசூ தத்தால்
சந்தவர் கோடியாம் சாஸ்திரம் பார்த்துமே (231)

பாத்துமே சாஸ்திரம் பயனறி யார்கள்
பூத்துமே விட்டவர் புகல்வது மரிதேன
தேத்துமே கேட்டவர் சேகதல முழுதுமே
ஆத்துமே பார்ப்பவர் அறிவிலார் நூலே (232)

நூல் பிறந்திடம் நுகர்ந்து மறிந்துண
சூல் பிறந்திடந் தோணுமுன் கண்ணெதிர்
பால் பிறந்திடம் பட்டுமே கலையதில்
நூல் பறந்தினுங் கரை தெரிந்திலரே (233)

இலரே அறிவு விருந்துங் காண்பரோ
வலரே பொருளின் மறம்பைத் தெருவரோ
கலரே சொலினுங் காண்பரோ கசடர்
சூலமே யழிவரோ கொடுமூலி காண்பரோ (234)

காண்ப ரென்பவர் காயந் துலங்குவார்
மாண்ப ரென்பவர் மானில மோடுவார்
பூண்ப ரெவ்வார் பூசைக் குறிகள்
நூண்பரே மூலியின் நுகர்ந்த வாரிதே (235)

வாரிதேன் றுணர்வோர் வாசவ னவனும்
சீரிதேன் றுணர்வோன் சேனிப்பனவ் வாறிலை
கூரிதேன் றுண்ணிக் கூட்டியலக்கம்
பேரினி வீவோன் பெருவன மூலியே (236)

மூலி யிருப்பிடம் மூதண்டக் கோழையில்
சாலி யிருப்பிடம் சதமா மவ்விடம்
வாலி யிருப்பிடம் வராதேன் வாசமாம்
காலிசூஸ்திரம் காணுர்கள் மூலியே (237)

மூலி யின்னமோ ரழுப்பணி சப்பணி
பாலி யாகியும் பங்கையும் மங்கையும்
சூலி கண்டகண் சூழ்ந்த மத்தியில்
வாலி கண்டதோர் வாயமா முள்ளதே (238)

உள்ள துரைத்தயென் உணர்ந்தேன்ப தறிந்திடு
கள்ள மறிந்து கலைவேரு ளாமலே
பள்ள நீர்ச்செழும் பங்கய தோஷமும்
வள்ள மூலியும் வாழ்ந்து கண்டிடே (239)

கண்டிடு கண்டிடு காரணக் குறியையும்
உண்டது சொல்வேன் உகந்துமோத் தறிந்திடு
வண்டனி நிறமாம் வாய்த்த தழைமுதல்
கண்டனைப் போலது கருத்த மேனியே (240)

மேனியில் மேகம் மெய்ப்பூச்சு சாம்பலாம்
தானி நிறமே தள்ள வர்ணமாம்
பானியின் காந்தி பட்டது சீரிடும்
கானிதை விண்டேன் நவிலாய்சண் டீசனே. ()

நாணு மம்மையும் யின்பமாய்ச் சொன்னது
வாசனும் கேசனும் வரம்பெற்ற மூலியாம்
பாசனுங் கையிற் பணிபாச மூலியாம்
வாசமே தருமது பெருமா மூலியே. (242)

மரமெனச் சொல்வது மாய சூதது
தரைமிசை சித்தர் தானதை மறைத்து
வரமூலி வழிலை வயங்கிட மறைத்தார்
தரையில்சண் டீசா சாஸ்திரத் திடங்காணே. ()

காணுவ தரிதேனக் கலங்கவே வேண்டாம்
பூணுமென் னெம்பதிற் பிரித்திட்ட நந்தியாம்
சாணது முழமிரண் டானது வடுக்கிலை
வீணது போகா விரிவது கண்டிடே. (244)

கண்டறி சூக்ஷங் காட்டிடு மூலி
விண்டிட யிந்நூல் விரிக்க வஞ்சினேன்
கொண்டிடப் பாசமாங் கோதை சாபமாம்
பண்டிடும் விதிப்பயன் பார்த்து அறிந்திடே. ()

பார்த்திட மௌனம் பலிப்ப தரிது
சேர்த்திடு மூலி சிவகாமி தன்னருள்
கார்த்திடக் காணும் காலனு மஞ்சுவான்
நாத்திசை யெங்கணும் நல்மூலி வாசமே. (246)

வாச மிருப்பிடம் வாழிட மெங்கோன்
தாசக் குளிர்நிலம் தனிநிலம் நாலிலும்
நேச மாயிடும் நிலவள வாயிடும்
மோச மிலைகாண் மூலியின் போக்கே. (247)

போக்கெனப் பாலையின் பெருமூலி அரிது
வாக்கென மூலியில் வாழ்கற் பூரம்
சாக்கென மருதையிற் சாய்மூலி போகமே
மாக்கென நெய்தல் மூலியாம் பலவே. (248)

பலபல வாசம் பகர்சாதி நாலிலும்
கலகல சித்தினி காயாப் பெருமூலி
வலகல சங்கினி வாய்த்தலை மிச்சமாம்
கலகலப் பணியிடு காயப் பாரமாம். (249)

பாரமா மெனப்பணி பத்மினி சத்தியாந்
தாரமா மட்டமாம் தான்காண மிச்சமாம்
ஆரமே நமதிட மணுகிலார் காரமே
தூர தூரமே கண்டய்ய ரேழுமே. (250)

ஏழு முக்கியம் யெட்டொரு நால்மா
வாழு முக்கியம் வாசமிரு மாகாணி
தோழு மக்கடை சுடர்க்காணி யொன்பதில்
ஈழு மூலையாம் யிருகா லெழிலே. (251)

இருகா லெனிலோ யெட்டரைக் காணி
ஒருகால் முக்கால் ஒன்பது காணி
அருகால் நான்மா ஆடுமா யெட்டிற்
சருகா மலமதைச் சாரக் காணே. (252)

காணி யென்பது கண்டறி லக்கமே
வாணி யென்பது வாய்ப்பால் அதனிலே
பூணிக் காண்பவர் போற்றுவார் மூலியை
நாணி நிற்பவர் காணுப் பொருளிதே. (253)

பொருளிது வாமெனப் பிரித்தறி வாலறி
அருளிது வாமென ஆய்ந்தாற் காணியாய்
தெருளுவர்க் காகுமென் சிந்தை யுணர்வினல்
இருள்மூலி வெளியா மென்றறி வாரே. (254)

என்றறி வோர்க்கா யின்னமுங் கேளாய்
குன்றறி பதினேழ் கூட்டுமேப் படியே
ஒன்றறி மெத்த உயர்கண்ட மாவையே
வின்றறி யைம்பத் தோன்ற விருந்திடே. (255)

ஈய்ந்திடக் கண்டே யிகழ்ந்திட வந்தோர்
சாய்ந்திட மாவைச் சதிரத்தில் மாறி
காய்ந்திட நகாரம் கலந்தடை கோணம்
வாய்ந்திட வகாரம் வாய்த்திடப் பாச்சுமே. ()

பாச்சிட வகாரம் பதிமூன்றில் மையம்
காச்சிட நடுவரை கணக்கிடு மையம்
தோச்சிடு மதனில் துடர்ந்த நடுவரை
ஆச்சிடு கண்டறி அம்மூலி நாமமே. (257)

நாமம் வகாரம் நாயகி சிகாரம்
தாமம் யகாரம் தாங்கு மூகாரம்
பாமம் யவ்விதம் படர்மூலி யாமது
ஊமம் மூன்றினில் உறங்கு மூலியே. (258)

உறங்குங் காலையில் உணர்வுடை யானறி
திறங்குங் காலையில் சிவந்த வண்ணமாம்
பிறங்கும் பிறங்கும் பேய்க்கூத் தாடிடும்
இறங்கும் மாநிலத் தியாவரு மகிழ்வரே. (259)

மழுவரே மங்கள மாமிது வெண்ணத்
தொழுவரே கயிலையின் தொண்டர்க்குத் தொண்
வழுவிலா யாவரும் வாக்கமு தருந்தவே [டராம்
பழுதிலா யானுரை பாசமாமூலியே. (260)

பாசநல் மூலியால் பாஷாண முடங்கும்
வாசனைப் பூவால் வாய்க்கும் வெண்ணீரும்
காசதாய் விந்திற் கட்டுமே சூதம்
தோசநற் காயில் தூளியாஞ் சூதமே. (261)

சூத மடங்கித் துருசின் வாறுகேள்
வாத மண்டம் வதைத்திடுங் கட்டாய்
பேத நடுக்கம் பிறந்திடுந் தூரிசை
வேத சாரம் வீரிடுந் திங்களே. (262)

திங்க ளொன்றிற் சிறந்த பிண்டமாம்
மங்கச் சாரத்தை மடக்கிக் கட்டிடும்
பொங்கத் தைந்தில் பொய்த்து நீற்றிடும்
மங்கைச் சிலையில் மடியுமெட்டேட்டுமே. (263)

எட்டுடன் செம்பு யின்பக் கலங்கறும்
தொட்டது மூலி துளிர்பால் போக்கிடும்
கேட்டநல் வங்கம் கிளருதி ரத்தில்
பட்டிட் அயமும் பலவுமாண் டிடுமே. (264)

மாண்டவர் காண்பரோ மாய மூலியை
பூண்டவர்க் கொக்குமே பேர்லிவான் சூத்திரம்
ஆண்டவர்க் கருளும் புரிபவர்க் காகுமிக்
காண்டமென் னாலிது கடைமுந் நூறுமே. (265)

முன்னா ருமென மொழிந்த நந்தியான்
இந்நூற் பிரிவினைக் கிடவன்ப தென்றறி
என்னா லாண்டு யிதையறி வோர்க்குப்
பொன்னார் மவுனம் பூண்பவர் காண்பதே. ()

காண்பரே தந்திக் ககனமூ வாயிரம்
வீண்ப தென்பதை வெருந்திப் போகா
நாண்ப தத்தனை நல்மூலி யாகிடும்
வாண்பதி மருந்துடன் வசியசித் தாகுமே. ()

சித்தாகும் யோகம் திறந்தரும் போதம்
வித்தாகும் பூரணம் விடுபில்லி சூனியம்
எத்தாகுஞ் சால மிடுமஞ்சட் காவி
சத்தாகுங் கேவுனம் சதானந்தி போதமே ()

போத மருந்தலாம் புணர்மூலி சேர்க்கையிற்
சூத மறிந்திலார் தொழிலிது காட்டும்
நாத சாலமும் நாயகி வாழ்க்கையும்
பாத பங்கயன் பலிபீடங் காண்பரே (269)

காண்பரே அண்டத் தந்தியரற் பலவும்
பூண்பரே கற்பம் பொலிக்கடை கட்டை
ஊண்பற் குதிரை யுவந்த நடைவழி
பாண்பரே சேக்கர் பாணமும் ஏறுமே. (270)

ஏறு மவ்வழி யிருவழிப் பூட்டது
கூறு சண்டனைக் கூற்றாய்க் கொண்டிடும்
மாறு கொண்டிடில் மாய்க்கும் லோகமே
தேறு மிக்குணம் தெரிவ துண்மையே (271)

உண்மையாந் தந்தியில் ஒருகோடி கொண்டு
நன்மையாம் புங்கவன் நல்லெட்டுப் பெருவிரல்
வன்மையாய்ச் சீவி வாங்குபால் வீசம்
தோன்மையாய்த் தந்தியைத்தொகுத்ததிலிட்டே

இட்டதை வைப்பா யிளங்கதிர் மட்டும்
போட்டேன யெடுத்துப் புரிநிழல் வைப்பாய்
சட்டென வாளச் சார்ந்தது பாருபின்
கட்டளைப் படியாய்க் கடுகேள் ளெண்ணெய்யே

எள்ளெண்ணெய் காணியும் யிகமதிற் கூட
வள்ளலாம் மூலிதோல் வளரேழு விரலாம்
கள்ளமா யதையும் கண்டித் திடுமதில்
உள்ள மருந்திட் டுடனெரி தீயே. (274)

தீயிடு முத்தெண்ணெய் சிமிழின் கிறமாய்
ஈயப் பட்டைகீழ் யெரிந்திடப் பொங்கியே
ஓயிடு மடங்கி உதிரக் கட்டியாம்
நீயெடு பார்த்து நினைத்த தருந்துமே. (275)

அருந்துந் தேன்விட் டரைத்தெடு கட்டியை
வருந்துநற் சிப்பியில் வைத்திடு பதனமாய்த்
திருந்துநல் வங்கினி தீட்டிடு யெமலி
வருந்தி வருந்துனே வணங்குவார் பாரே. (276)

பாரே கிழங்குப் படிகாரம் போசையில்
தீரே வங்கினி திலதத்தின் வேசையில்
ஆரே யடிபட் டாடுவார் நிலப்பயிர்
சேரே பகைஞர் சிதறுவா ருனக்கே. (277)

உனக்கே யுரைத்தது உண்மையா மென்றறி
எனக்கே வாய்ப்ப தென்றிசை நந்தியாம்
மனக்கூர் காண வரமாய்க் கூட்டிதாம்
தனக்கே தன்னருள் தருவது சாந்தமே. (278)

சாந்தமா யின்னுமோர் தாவரங்கேளு
காந்த மென்றொரு கள்ளியின் பட்டையை
வாந்த சூத மதற்கிரு பலமாம்
தாந்ததண் டக்கோடி சரிவீதம் கூட்டே. (279)

கூட்டியே நெகிளக் குழப்பி யரைத்தெடு
ஆட்டியே மேதைக் கொம்பினி லடைத்து
மூட்டியே தீயை யடுக்கிடு வெந்தபின்
சாட்டிய பித்தெடு சத்ததைக் காணவே. (280)

காணவே பித்தின் கடுப்புதுக் கோடியைத்
தோணவே கொண்டு தொலைத்தெடு பூசையில்
மாணவே சமனிடை மாட்டுமுன் மருந்தை
ஊணவே கூட்டி யோட்டி யரைத்திடே. (281)

அறைக்கையிற் சுண்ண மதுவென்று மாட்டிச்
சிரைக்கமி யென்று சீருடன் வழித்து
தரைக்குள் மேதை தன்கொம்பில் மாட்டிடு
மரைத்தாற் பொருளை மாதர்க்கு மாதியே. (282)

ஆதியா மஞ்சள் அன்புள்ள யெமலியைப்
பாதியாம் பிறையிலே பகர்ந்திடு கொண்டு
சாதியா மதனிற் றட்டிடு முத்தெண்ணெய்
மாதியா மஞ்சன மாலைவிட் டறிந்திடே. (283)

அறிந்திடக் காணும் ஆழிசூழ் புவியினிற்
சொறிந்தாற் பொருளும் துலங்கவே காணும்
யெறிந்தால் லெமலியா யெங்குமே துலங்கும்
விரிந்தாற் பார்க்குள் விளங்குமா வலரே. (284)

நாவல ரெங்கணும் நானிலப் பூங்கொடி
காவல ரேசக் கணங்களுங் காச்சினை
கோவல ரிந்திரக் கோமான் குடிமனை
மாவலஞ் சேர்த்திடு மையின் குணமதே. (285)

குணமென்ன நந்தியான் கூறிய யிம்மொழி
மனமெனச் சேர்வோர் மகிழ்வரே சத்தியால்
தனமென வேதன் சாபம் பொல்லாது
நினமெக் குறுதி நியமமா யறிவதே. (286)

அரிவதே யின்னுமோ ரதிசயங் கேட்பாய்
சேரிவது சண்டீசத் தெய்வமே மவுன
சரிதையில் நின்றறி சத்தியந் தேவியாம்
பிரிவது அரிதெனப் பேசுவோர்க் காகுமே. ()

ஆகுநல் லண்டத் தறிந்ததோர் தந்தியிற்
பாகுநற் சீனியிற் பகர்பசும் பாலுடன்
வேகுடன் யிரண்டிட் வெந்து குடிப்பிர
மாகு நாற்போகம் அளவிலா லீலையே. (288)

அளவிலாப் போகமு மாகுமே சாபமும்
தளவிலா மூலியின் சாமப் படியாம்
உளவிலார் காணுர் உயர்ந்தநன் ருட்டை
களவிலாப் போக்குங் கண்டறி போகமே. (289)

போகமும் யாகமும் பொருமையாற் காண்பது
தாகமுஞ் சோகமுந் தன்னு லறிவது
பாகமும் வாதமும் பகர்வர்ணந் தோன்றினல்
யோகமுந் தேகமும் உண்மையாலறிவதே. (290)

அறிவ தறிவினல் ஆசா னுருவனல்
பிறிவ தெவ்வாறு பிரணவ சூட்சமே
குறிவ தெங்தேனக் குண்டலி பூசையால்
அறிவறி மூன்று மாதியாங் கண்டிடே. 291)

கண்டிடப் பொற்றலை காணியுந் தந்தியும்
சண்டிட லோகஞ் சரியிடை கொண்டு
வண்டிப் பாலில் வைத்திடக் கண்டபின்
கொண்டிடத் தூளாய்க் கூட்டு சீனியே. (292)

கூட்டு சீனியோ கூட்டுநா லத்தொரு
மாட்டு பசுநெய் மகிழ்பச்சை யாயிருக்கும்
ஓட்டிற் பிசைந்திட ஒக்கக் கட்டியாம்
வாட்டுக் கஞ்சியாம் வாய்க்குண வாகவே. (293)

உணரு யுண்பதே யோகமாம் புத்தி
நிணருய் நிற்பதே நேமேண் டலமாம்
குணருய் பூரணக் குண்டலி யேறிடும்
மணருய் சத்தியம் மகிழ்கற்ப மாச்சுதே. (294)

மாச்சென்ற கற்பம் மகிழ்ந்திருந் தவர்க்குப்
பாச்சென்ற யோகம் பாயுமே சட்டை
ஆச்சென்ப தின்று வாயிர மேலதாம்
போச்சென்ற மறையிற் பூரண மாறியே. (265)

மாறிடுந் தோல்லே மனமு முறுதியாம்
வேறிலே சண்டனே வேதனும் நீயாம்
கூறிடு மஷ்ட கோணகல் முனிவனுய்த்
தேறிடுங் கற்பத் திறமையில் வாசியாம். (296)

வாசியி லேறிடு வாய்ப்ப துணக்ககேலாம்
ஊசியிற் காந்தமாய் ஒட்டுமேன் னாலிது
வேசியின் வாழ்க்கைபோல் வீணர்க் கிருந்துமே
காசியிற் காணலாங் கடுமூலி சூட்சமே. .(297)

சூட்சமாய்ப் புத்தி சூட்ச மறிவோர்கள்
மோட்சமாய் நிகண்டு மோழிந்த முந்நூறினிற்
காச்சியாங் கண்டவர் காணுமே கண்டது
வாச்சிச கோதரி வாழிடஞ் சேருமே. (298)

சேருமேன் றியம்பிய செயலறி யாமலே
வேருளங் கோண்டிட வேதனுஞ் சத்தியாய்
பூருள பூரணம் போருந்தா தேன்றறி
நாருள மூலியால் நல்லர சேண்ணே. (299)

அரசனு மேன்னா லாதியாய் வகுத்தேன்
வரசே யிம்மோழி வடநூ லாகும்
இருசத மேன்னா லியன்ற மூன்றிலுங்
கரசமாய்க் கோண்டபின் காட்சியிந்நூலே. (300)

நூலினி லுகந்தது நிகண்டு மூந்நூறே
பாலினி லவ்வணம் பகர்ப்பதம் மூணரை
சாலிநற் பானே தாங்கிய சத்தி
வாலிதன் னருளால் வாழ்வரே மாண்பர் (301)

மாண்ப ரேன்பதே மறையவர்க் காகிடும்
காண்பரே யோகம் கண்டிட் நந்தியான்
பூண்பரே சக்கரம் பொருளிது மூவரும்
ஊண்பவ மகற்றி உயர்நிலை வாழ்வதே. (302)

நிலையில் நின்று நிகண்டுமுந் நூறும்
கலையில் நல்ல கலைக்யான மாயிரம்
அலைகா வியமா யிரத் திருநூறும்
துலையிரு நூறும் சூஸ்திரங் கண்டிடே. (303)

கண்டுதே றுங்கருக் கடைமுந் நூறும்
விண்டு சொல்லும் வினயமு மைம்பது
உண்டுமேண்பதும் உற்ற அறுபதும்
கொண்டு நீபாரு கோர்வைநூல் முற்றுமே. (304)

## நந்தீஸ்வரர் நிகண்டு நா

முற்றிற்று.

சிவ
மயம்

உ

முருகன் றுணை.

# நந்தீஸ்வரர் கருக்கடை நோக்கு

## சூஸ்திரம் ௩௰.

பூரண மான பொன்னடி மூலம்
காரண மான கணபதி சித்தி
சாரணை மேலாய்ச் சார்ந்திடுஞ் சத்தி
ஆரண ஞானத் தடிமுடி காப்பே. (1)

காப்பது ஈசன் கருணையி னாலே
கூப்புடன் வாதக் குறிதெரிந் திட்டேன்
சேர்ப்பது தானே தெளிவுமுந் நூற்றைப்
பார்ப்பவர்க் கல்லோ பலித்திடுஞ் சித்தே. (2)

சித்தியாம் கர்த்தி தேவனென் போராம்
அத்தனுர் கூப்பிட் டருளினுல் வாதம்
பெற்றதி னாலே பெயரெனக் காச்சு
முத்தமி ழதனுல் மொழிந்தமுந் நூறே. (3)

முந்நூறில் ஞான யோகமுஞ் சொன்னேன்
முந்நூறில் நிகண்டு புலன்வெளி விட்டேன்
முந்நூறில் தீட்சை முக்கியஞ் சொன்னேன்
முந்நூ று மிந்த முப்பதில் முடிவே, (4)

முடிவான யீசன் மொழிந்திடு நூல்போல்
அடியே னுடன்ஜன காதிபர் நூலும்
படியதில் ரோமன் பாடியநூலும்
கெடியதா மிவைகள் நோகு மொன்றே. (5)

ஒன்ருன மூல னுரைத்திடு நூலும்
அன்ருன கொங்கணன் அருளிய நூலும்
குன்ரு தகத்தியர் கூறிய நூலும்
தின்ருமல் மூன்றுஞ் சரியென்ப தாச்சே. (6)

1

ஆச்சுது சருவு ரானவன் சொல்லும்
வீச்சுரை ராமன் மெய்யுரை நூலும்
தாச்சி யில்லாமற் சரியென்று தோன்றுங்
காச்சியின் பாடல் காலாங்கிதானே. (7)

காலாங்கி மச்சர் முனினு லிரண்டும்
பாலுள் நெய்போல் பார்ப்பவர்க் கொன்றும்
ஞாலமா மீதில் கவின்றது போகன்
மூலமாஞ் சட்டை முனிமொழி யென்றே. (8)

மொழிந்திடு மற்ற மடபதி யெல்லாம்
தெளிந்திடும் நூல்கள் சிறிதுக ளுண்டு
குளிர்ந்திடும் நூலைக் குகைக்குள் மறைத்தார்
நெளிந்திடும் போகர் நூல் நிரம்பவு முண்டே. (9)

உண்டுகாண் மற்ற சித்தர்க ளெல்லாம்
கண்டுகண் ணடையா கட்டினர் நூல்கள்
விண்டுசொல் லாது வேடிக்கை வாதம்
தொண்டர்கள் பார்த்துச் சுழன்றலை வாரே. (10)

அலைவதல் லாது ஆதியின் நூலைத்
தலைகடை கண்டு சார்ந்திட மாட்டார்
புலையர்க ளெல்லாம் பொருள்கண்டோ மென்று
குலைகடி நாய்போற் கூக்குர லாச்சே. (11)

ஆச்சுது வானத் தமர்ந்தவிர் தாலே
யீச்சர வுப்பு மெத்த வுண்டையா
பாச்சிது கோடி பலபல வுப்பில்
தீச்சுட ருப்புத் திருவித மென்னே. (12

என்னவே வானத் திடியினி லொன்று
சொன்னதோர் பூமிச் சூலினி லொன்று
கன்னிற மான கடலினி லொன்று
முன்னவர் சொன்ன மூன்றுமுப் பூவே. (13)

பூவிது வாய்வு அக்கியு மப்பும்
ஜீவனென் றெண்ணிச் செப்பின தாலே
மாவெலு மிடையிங் கலேசுழி மூன்றும்
தேவியிற் குள்ளாய்த் தெறிந்தறி வீரே. (14)

அறிவது முத்துப் பவளமும் நீலம்
குறிதெரி யாமற் குருடர்க ளெல்லாம்
வெறிகொளும் வாதிகள் வீண்கரி சுட்டு
எறியினில் வீழ்ந்த யிசல்கண் டீரே. (15)

ஈராறு மொன்றும் ஈரெட்டு மொன்றும்
சேராத வீணர் ஜெபம்பண் ணுவார்கள்
கூரான வாசியைக் குருவாகக் கண்டத்துள்
நேரான போது நிலேக்குமெய்ஞ் ஞானமே. (16)

நீலேக்கு மூலத்தில் நிற்கின்ற வாசியைத்
தலேக்குள் ளாகத் தமர்கொண் டிருத்திடில்
மளேக்குமோ அம்மா மனக்குரங் கையா
கலேக்கும் பொழுதிற் கனல்பிற வாதே. (17)

கனலாஞ் சுழிமுனேக் கால்கொண் டிருந்திடப்
புனலாகு மிந்து பூரண மாய்விடும்
தனியான யோகச் சமாதியு மெய்திடும்
வனவாச மென்ன மானிலக் தானே. (18)

மானிலக் தானும் வரையி லிருப்பதும்
தானிலக் தானே தரையி லிருப்பதும்
தேனிற் பிரணவஞ் சிங்குவங் கேறிடில்
ஊனில மான வுயிர்சிவ மாமே. (19)

உயிர்சிவ மானல் உடல்சிவ மாகும்
பயிர்விரை யானல் விரைபயி ராகும்
பயில்வது மொன்றே பாடலு மொன்றே
தயிரிய மதனுற் றுணரதி வீரே. (20)

சவுக்கார உப்பு.

தானாறு மிந்த சவுக்கார உப்பையும்
காணும் நூறில் கயம்படச் சொன்னேன்
தேனான உப்பைத் திராவகஞ் செய்தால்
வானா மகண்டம் வழிகாண லாச்சே. (21)

வழிகாண் வழலைச் சவுக்கார நீர்தான்
சுளுவாயிந் நூலிற் சொல்லுவேன் மூலம்
பழியாமல் காணும் படித்தமுந் நூறில்
நெளியாமல் நிற்கும் நிறைசவுக் காரமே, (22)

சவுக்கார வைப்புஞ் சாரநீர் வைப்புஞ்
சிவக்காது மஞ்சளிற் சென்றாலு மையா
தவக்கார ரல்லோ தான்முடிப் பார்கள்
பவக்கார னுக்குப் பலியாது காணே. (23)

காணாது யிந்தக் கருவெல்லா மையா
வீணாக லோகர் மெத்தவுஞ் செய்வார்
தோணாமல் வாதஞ் சுட்டிடத் தோஷமாம்
மாணா வுனக்கு மார்க்கம் விண்டோமே. (24)

மார்க்கமுந் நூறில் வைத்திடுஞ் சாரம்
ஏர்க்கப் பலமொன் றெடுத்திடு கட்டியாய்
காக்குமே சீனக் கார மரைப்பலம்
தீர்க்க மிணங்கன் சேர்த்திடு காலுமே, (25)

காலா முருவியும் காவி யரைப்பம்
கோலா மமுரி கூர்மை யரைப்பலம்
வேலாவின் பட்டையில் வேர்த்திடும் நீரைச்
சாலா மதில்விட்டுச் சரக்கெல்லாஞ் சாரியே. (20)

சாரித்துக் குப்பியிற் றானரை மட்டாய்ப்
பூரித்து மேலே பொருந்திவை குப்பியை
காரித்து வாரம் நடுவில் விலாப்புறம்
மாரித் துவைந்து மண்சீலை செய்திடே. (27)

சிலையைச் செய்து தீயடுப் பேற்றி
வாலையை வணங்க வந்திடும் நீர்தான்
ஆலயத் துள்ளாய் அமர்ந்திடுஞ் சத்திதான்
வேலையின் நீர்போல் விதநிறம் விந்தே. (28)

நிறமிந்த நீரை நீகாரத் தாலே.
உறமென்ற குப்பி யொன்றது வாங்கி
வறமென்ற நீர் வார்த்திடு குப்பியில்
அறமெனக் குருவண் டஞ்சது போடே. (29)

அஞ்சது போட்டு அடைத்திடு வாய்தனைப்
பஞ்சது னாலே பார்த்திடு கவசமாய்
வஞ்ச வுவர்க்குள் வைத்திடு மண்டலம்
கெஞ்சுஞ் சரக்கு கிறுகிறுப் பாமே. (30)

ஆமே யிவைசவுக் காரத்தின் நீரால்
ஓமே மிருதார் சிங்கியி லூட்டிடவே
வாமே சுண்ணும்பில் வைத்திட் டெரித்திடத்
தாமே நிறைந்த சற்குரு வெண்ணே. (31)

குருவினிற் பச்சைத் துருசது சுண்ணம்
குருவினி லெண்ணெண் சரக்குகள் சுண்ணம்
குருவி லுபரசக் கூட்டமி தெல்லாம்
குருவது வாகிக் கோலமு மாமே. (32)

கோலமி தென்னுங் குருபுத னாலே
காலனு மில்லை கலியனு மில்லை
பாலெனு மமுதப் பானமு முண்டாம்
மூலமு மிதுதான் முப்பதும் முற்றே. (33)

நந்தீஸ்வரர் சூஸ்திரம் முப்பது,

முற்றிறறு.

குமரன் றுணை.

# அகஸ்தியர் அருள்ஞான விளக்க மென்னும்,

# துறையறி விளக்கம்.

இதில் வாசியோக ஞானசாதன விபரங்களைப் படிக்கும் எல்லோருக்கும் எளிதில் மனதிற்குப் புலப்படும் வண்ணம் மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிறது. யோகசாதன மடைய விரும்பும் ஒவ்வொருவரும் தவறாது வாங்கிப் படிக்க வேண்டிய தவசியமானது புதிய நூல் விலை அணா 0—௨—0

## நந்தீஸ்வரர் கோர்வை நூல்களின் விபரம்.

| | |
|---|---|
| நந்தீஸ்வரர் சிவவாகட வைத்திய சாஸ்திரம் | ௨,௫ |
| ஷை வைத்தியகாவியம் | ௫௱ |
| ஷை கலைக்கியானம் | ௫ |
| ஷை கருக்கடை | ௩௱ |
| ஷை நிகண்டு | ௩௱ |
| ஷை குருநூல் | ௨௱ |
| ஷை ஞான சுத்திரம் | ௱ |
| ஷை தண்டகம் | ௱ |
| ஷை வைத்தியம் | ௮௰ |
| ஷை வைத்திய சூத்திரம் | ௯௰ |
| ஷை சங்கம விளக்கம | ௯௨ |
| ஷை வைத்தியம் | ௪0 |

| | |
|---|---|
| நந்தீஸ்வரர் மூப்பு சூஸ்திரம் | ௩௰௭ |
| ஷை கருக்கடை ௩௱க்கு சூஸ்திரம் | ௨௰ |
| ஷை வைத்தியம் | ௩௨ |
| ஷை உபதேசம் | ௨௪ |
| ஷை சூஸ்திரம் | ௰௫ |
| ஷை பூஜாவிதி | ௰௨ |
| ஷை பிரணவசூஸ்திரம் | ௰௨ |
| ஷை மூப்பு சூல்திரம் | ௰௨ |
| ஷை விஷகுளிகை | ௮ |
| ஷை அட்டமாசித்து | ௫ |
| ஷை ஜீவஉற்பத்தி சிந்தாமணி | |

107846

இப்படிக்கு.

ஜி. இராமசாமிக்கோன்,

## இ. ராம, குருசாமிக் கோனர் ஸன்.

புத்தகசாலை, புதுமண்டபம் மதுரை.

23A
13633